# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, திசெம்பர் மாதம் 02 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 51.50** **தபாற் செலவு : ரூபா 15.00**

## 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம்

[*2005 நவம்பர் மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 18/2005*

***இலங்கை சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; சுற்றுலாப் பயணத் தொழில்துறை மற்றும் ஏனைய உறவுபட்ட தொழில்துறைகள் தொடர்பான கொள்கையைத் திட்டமிடுவதனையும் செயற்படுத்துவதனையும் இயலச் செய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய தத்துவங்களைச் சொல்லப்பட்ட அதிகாரசபைக்கு உரித்தாக்குவதற்கும் ; தொழில் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் ; கண்காணிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; 1966ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கும் ; 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகளை நீக்கஞ் செய்வதற்கும் ; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டமானது 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் அத்துடன் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

## பாகம் I

### *அத்தியாயம் I*

#### ***இலங்கை சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகாரசபை***

*இலங்கை சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.*

***2.*** *(1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சுற்றுலாப்பயண அபிவிருத்தி அதிகாரசபை என அழைக்கப்படும் அதிகாரசபையொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.*

2 –PL 000710– 1,250 (2005/10)

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயர்கொண்டு, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம், அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் கட்டுக் காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறை யில் அது மாற்றப்படலாம்.

(4) அதிகாரசபையின் இலச்சினையானது, தவிசாளரினதும் அதிகாரசபையின் இரண்டு உறுப்பினர்களினதும் முன்னிலை யில் அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் ஒப்பமிடப் படும் எல்லாச் சாதனங்களிலும் பொறிக்கப்படுதல் வேண்டும் ; அவர்கள் அதற்கத்தாட்சியாக அத்தகைய ஆவணத்தில் ஒப்பமிடு தல் வேண்டும்.

அதிகாரசபையின் குறிக்கோள்கள்.

3. பின்வருவன அதிகாரசபையின் குறிக்கோள்களாதல் வேண் டும் :—

(அ) சுற்றுலாப் பயணம் மற்றும் பயணம் மேற்கொள்வோர் விரும்பிவரும் இடமாக இலங்கையை அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) இத்துறை தொடர்பாக, அமைச்சரவையினால் வகுத்த மைக்கப்பட்ட கொள்கையினுள், பயண மற்றும் சுற்று லாப் பயணத் தொழில்துறை தொடர்பான கருமங்கள் மீது சுற்றுலாப் பயணம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு ஆலோசனையளித் தல் ;

(இ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கையை சுற்றுலாப் பயணம் மற்றும் பயணம் மேற்கொள்வோர் விரும்பி வரும் இடமாக அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கைச் சுற்றுலாப்பயணப் பணியகத்துக்கு வழிகாட்டுதலை வழங்குதல் ;

(ஈ) மனிதவளப் பயிற்சியையும் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் பொறுப்பேற்பதற்கு இலங்கை சுற்றுலாப் பயண மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்துக்கு வழிகாட்டுதலை வழங்குதல் ;

(உ) இலங்கையின் பொருளாதாரத்தை விசாலிப்பதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் பங்களிப்பை உறுதிப்படுத்துமுகமாக சுற்றுலாப்பயண மற்றும் பயணத்துறைகளைத் தீவிரப்படுத்துவதற்கு உழைத்தல்;

(ஊ) விருந்தோம்பல் தொழில்துறை உட்பட, போதுமானதும், கவர்ச்சியானதும், வினைத்திறமையானதுமான சுற்றுலாப் பயணச் சேவைகளை நிலைபேறானவொரு முறையில் அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்துதலும்;

(எ) சுற்றுலாப் பயணத் தொழில்துறை மற்றும் ஏனைய உறவுபட்ட தொழில்துறைகள் என்பன தொடர்பாக உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரங்களை அபிவிருத்தி செய்து வலியுறுத்திப் பேணுவதற்காக சுற்றுலாப் பயணத் தொழில் முயற்சிகளுக்கு உரிமமளித்தலும் அங்கீகாரமளித்தலும் ;

(ஏ) சுற்றுலாப் பயணத் தொழில்துறையை மேம்படுத்துவதிலும் அத்தகைய தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட மேம்படுத்துகைகள் மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளிலும் பங்குபற்றுமாறு தனியார் துறையிலுள்ள ஆட்களை அல்லது ஆட்கள் குழுக்களை ஊக்குவித்தல்;

(ஐ) மேலேயுள்ள குறிக்கோள்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உகந்ததாகக்கூடியவாறான அத்தகைய வேறெலலாச் செயல்களையும் புரிதல்.

அதிகாரசபையின் அமைப்பு.

**4.** அதிகாரசபையானது அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் தவிசாளர் ;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(இ) சுற்றுலாப்பயணம் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஈ) திறைசேரிச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(உ) இலங்கை சுற்றுலாப் பயணி ஹோட்டல்கள் கழகத்தி னால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(ஊ) உள்வருகைச் சுற்றுலாத் தொழிற்படுத்துநர்கள் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(எ) இலங்கைப் பயண முகவர்கள் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர் ;

(ஏ) பயணம் மற்றும் சுற்றுலாப் பயணத் துறைகளில் அனுபவமும் அறிவும் கொண்ட ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(ஐ) மாகாண சபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல் லது அவரது பிரதிநிதி.

அதிகாரசபையின் உறுப்பாண்மைக் கெதிரான தகைமையீனம் முதலியன.

**5.** (1) ஆளொருவர் –

(அ) ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சார்ந்த சுற்றுலாப் பயணச் சேவைகளைத் தொழிற்படுத்து கின்ற அல்லது வழங்குகின்ற ஏதேனும் தொழிலின் அல்லது ஏதேனும் தொழிலில் சொந்தக்காரராக, பங்காளராக, பணிப்பாளராக, பெரும்பான்மைப் பங்குடையவராக அல்லது ஊழியர் ஒருவராக இருந் தால் அல்லது வந்தால் ;

(ஆ) பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூர் அதிகாரசபை உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால் ;

(இ) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஈ) சித்த சுவாதீனமற்றவராக அல்லது உடல் ரீதியாக இயலாமைக்குட்பட்டவராக இருந்தால் அல்லது வந் தால் ;

(உ) பொறுப்பு விடுக்கப்படாத வங்கி முறிந்தவராக அல் லது கடனிறுக்க வகையற்றவராக இருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஊ) முன்னறிவித்தல் கொடாமல் அதிகாரசபையின் அடுத் தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு அவர் வருகை தராதவராக இருந்தால் அல்லது வந்தால்,

அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலி ருந்து அல்லது தொடர்ந்திருந்து வருவதிலிருந்து தகைமையற்ற வராக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், 4 ஆம் பிரிவின் (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) என்னும் பந்திகளின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(2) அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொரு வரும், இறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து விலகுவதன் மூலம் பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலொழிய, அந்தப் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் எனபதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) அதிகார சபையின் உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு அதற் கென முகவரியிடப்பட்ட கடிதமூலம் எந்நேரத்திலும் பதவியில் இருந்து விலகலாம்.

(4) அதிகாரசபையினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ நேரடியற்ற வகையிலோ அக்கறைகொண்டுள்ள அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர், அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்தில் தமது அக்கறையின் தன்மைபற்றி வெளிவிடுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய வெளிவிடுகையானது அதிகார சபையின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர், அத்தகைய அக்கறை சம்பந்தமான எந்தக் கருமம் தொடர்பிலும் அதிகாரசபையின் ஏதேனும் கலந்தாராய் வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலாகாது.

(5) அதிகாரசபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று இருப்பதன் காரண மாக மாத்திரம் அல்லது அதன் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லு படியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

(6) அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதி தவிர்ந்த, அதிகாரசபையின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுவது உசிதமானதாயின் அதற்கான குறித்துக்காட்டப்பட்ட காரணங்களுக்காக, அவ்வாறு செய்யலாம்.

(7) தவிசாளர், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம், தமது பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகல் அமைச்சரினால் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

(8) தவிசாளர் அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறக்கும், பதவி விலகும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பட்சத்தில், விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய தவிசாளரை அல்லது உறுப்பினரை அடுத்துறுவதற்கு அமைச்சர் வேறோர் ஆளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) தவிசாளர் அல்லது எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக, தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாதவராக இருக்கின்ற விடத்து, தவிசாளரின் அல்லது அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

*நெடுங்கால இலக்குகளையும் நான்கு ஆண்டுத் திட்டத்தையும் தயாரித்தலும் அங்கீகரித்தலும்.*

**6.** (1) அதிகாரசபையானது —

(அ) இலங்கையில் சுற்றுலாப் பயண அபிவிருத்திக்கான உத்தேச நெடுங்கால இலக்குகளையும் ;

(ஆ) இலங்கைக்குள்ளாக சுற்றலாப் பயண அபிவிருத்திக் கான உத்தேச நான்காண்டுத் திட்டத்தையும்,

வகுத்தமைத்து அமைச்சருக்கு முன்வைத்தல் வேண்டும்.

(2) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நெடுங்கால இலக்குக ளையும் நான்கு ஆண்டுத் திட்டத்தையும் பெற்றுக்கொண்டதன் மேல், அவற்றை அங்கீகாரத்துக்கென அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சரவை நெடுங்கால இலக்குகளை யும் நான்காண்டுத் திட்டத்தையும் திருத்தங்களுடன் அல்லது திருத்தங்களின்றி அங்கீகரிக்கலாம்.

ஆயின், மேற்சொல்லப்பட்ட நான்காண்டுத் திட்டம் கொள்கை மாற்றங்களை உள்ளடக்குவதற்கென அல்லது ஏனைய புதிய நெடுங்கால இலக்குகளை உள்ளடக்குவதற்கென ஆண்டு தோறும் மீளாயப்படுதல் வேண்டும். அத்தகைய மீளாய்வு ஒவ்வொன்றும் அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் கூட்டங்கள் முதலியன.*

**7.** (1) அதிகாரசபையின் தவிசாளர் அதிகாரசபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதே னும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகை தராதபோது, சமுகமாயி ருக்கும் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குல் வேண் டும்.

(2) தவிசாளர் அல்லது ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற ஆள், தமது சொந்த வாக்குடன், அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், அதிகார சபையினால் வேறு வகையாக உடன்பட்டுக் கொள்ளப்பட்டாலொழிய, ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, அதிகாரசபையின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கானவையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கானவையுமான விதிகளை ஆக்கலாம்.

*அதிகாரசபையின் தலைமை அலுவலகம்.*

**8.** அதிகாரசபையின் பிரதான அலுவலகம், இலங்கையில் உள்ள கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும். அதிகாரசபை, எவ்வாறாயினும், இலங்கைக்குள்ளாக அல்லது இலங்கைக்கு வெளியே கிளை அலுவலகங்களைத் தாபித்துப் பேணி வரலாம்.

*அதிகாரசபையின் தத்துவங்களைக் கையளித்தல்.*

**9.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம். அவ்வாறு கையளித்தமை எப்படியிருப்பினும், அதிகாரசபையானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைத் தொடர்ந்து பிரயோகிக்கலாம். புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

(2) தவிசாளர், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும், அதிகாரசபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதி பிரதான நிறைவேற்று அலுவலராதல்.*

**10.** (1) அதிகாரசபையின் மதியுரையின்மீது அமைச்சரினால் ஆளொருவர் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுதல் வேண்டும்; இவர் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிப்பதில்

ஏற்புடையற்பாலனவான கட்டளைக்கற்களும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர், கூறப்படும் காரணங்களுக்காக, அதிகாரசபையினால் எழுத்தில் செய்யப்பட்ட வேண்டுகோளின்மீதும் அவசியமானவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும், குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம். பணிப்பாளர் தலைமையதிபதி அதன் மேல் பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, தவிசாளரின் முன்மொழிவின்மீது, அவசியமானவாறானதெனக் கருதப்படும் அத்தகைய தத்துவத்தை அல்லது பணியைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம். பணிப்பாளர் தலைமையதிபதி அதற்கென ஆக்கப்படக்கூடியவாறான அதிகாரசபையின் விதிகளுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர் தலைமையதிபதியாக அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

*தவிசாளரின் தத்துவங்கள் முதலியன.*

**11.** (1) தவிசாளர், 26 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணத்துறை இடப்பரப்புக்களிலுள்ளான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) தவிசாளர் அதிகாரசபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன், அவர் வருகைதராதபோது சமுகமாயிருக்கும் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும்.

*அதிகாரசபையின் தத்துவங்களும் பணிகளும்.*

**12.** அதிகாரசபையானது, பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்லாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) சுற்றுலாப் பயணத்தொழில்துறையுடன் அல்லது பணத்தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட தொழிலைக்

கொண்டு நடாத்துவதற்காக, அரசாங்கத்தின் முகவராக, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் செயலாற்றுதலும்;

(ஆ) இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் வசதிகளைச் சீராக்குவதில் ஈடுபடுதலும், உதவியளித்தலும், மேம்படுத்தலும், ஈடுபடுத்துதலும் அத்துடன் சுற்றுலாப் பயணிகள் விரும்பிவரும் இடமாக இலங்கையை அபிவிருத்தி செய்தலும் ;

(இ) சுற்றுலாப் பயணத்தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட சேவைகளைத் தாபித்தலும், பேணிவருதலும், தொழிற்படுத்தலும். சுற்றுலாப் பயணிகளுக்கு அத்தகைய சேவைகளை வழங்குகின்ற ஆட்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும் ;

(ஈ) சுற்றுலாப் பயணத்தொழில்துறை மற்றும் பயணத் தொழில்துறை என்பவற்றின் வெவ்வேறு பொறுப்பு முயற்சிகளினால் பேணப்படவேண்டிய தராதரங்களை விதித்துரைத்தலும் ஒழுங்குபடுத்தலும், பேணிவருதலும், வலியுறுத்தலும் ;

(உ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படவேண்டிய கட்டளைக் கற்கள்மீது வெவ்வேறு தொழில்முயற்சிகளுக்கு உரிமமளித்தலும், அதற்கு ஏற்புடைத்தான நியதி நிபந்தனைகளை விதித்துரைத்தலும் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும், குத்தகைக்கு எடுத்தலும், வாடகைக்கு விடுதலும், அடைமானம் வைத்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும், ஆயின், எவ்வாறாயினும் அசைவற்ற ஆதனம் அமைச்சரின் எழுத்திலான முற்சம்மதத்துடன் மாத்திரமே கையுதிர்க்கப்படலாம் ;

(எ) அதன் பணிகளை வினைத்திறமையாக நிறைவேற்றுவதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உசாத்துணைவர்களை ஈடுபடுத்துவதற்கான தேவை எழும்போதிலெல்லாம் அவ்வாறு செய்தலும் ;

*(ஏ) சுற்றுலாப் பயணத் தொழில்துறை தொடர்பான ஏதேனும் கருமத்தின்மீது மாகாண அதிகாரசபைகளுடன் இணைவதற்கான தேவை எழும்போதெல்லாம் அவ்வாறு செய்தலும் ;*

*(ஐ) ஆதாரக் கைத்தொழில்களினதும் சேவைகளினதும் அபிவிருத்தியை மேம்படுத்துதலும் அதற்கு உதவியளித்தலும் ;*

*(ஒ) சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதனை வசதிப்படுத்துவதற்கென, கம்பெனிகளை அல்லது வேறு குழுக்களைத் தாபித்தலும் ;*

*(ஓ) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதலும் ;*

*(ஔ) இலங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற இடங்களைப் பார்வையிடுகின்ற ஆட்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துதலும் ;*

*(க) அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் —*

*(i) சுற்றுலாப் பயணத்துறையின் குறிக்கோள்களுக்கிணங்க இலங்கையினுள்ளும் வெளியேயும் அதன் அபிவிருத்திக்காக நான்காண்டுத் திட்டமொன்றையும் மற்றும் ஏனைய இயைபான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், தயாரித்தலும் ;*

*(ii) இலங்கையில் சுற்றுலாப் பயணத்தொழில் துறையை மேம்படுத்தும் அல்லது அதன் மேம்பாட்டுக்கு உகந்ததாகவிருக்கும், இலங்கையினுள் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள ஏதேனும் தொழிலில் அதிகாரசபையின் பணத்தை முதலீடு செய்தலும் ;*

*(iii) அதிகாரசபையின் பணிகளுள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கென இலங்கையிலோ*

இலங்கைக்கு வெளியிலோ எவரேனுமாளுடன் ஏதேனும் கூட்டுமுயற்சியைச் செய்துகொள்ளுதலும் அல்லது கம்பெனியொன்றை அமைத்தலும் ;

(ஙு) அமைச்சரின் அங்கீகாரத்துடன் -

(i) பணிப்பாளர்களை அல்லது மதியுரைநர்களை நியமிப்பதன்மூலம், அல்லது ஏனைய ஆட்களுடன் ஒத்தாசை செய்துகொள்வதன்மூலம், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே சுற்றுலாப் பயணத்துறைத் தொழில் முயற்சிகளை முகாமைசெய்தலும், கட்டுப்படுத்துதலும் அல்லது மேற்பார்வை செய்தலும் ;

(ii) அதிகாரசபையின் நோக்கங்களுக்காக, மேலதிகப்பற்று, கடன் என்றவகையாக அல்லது வேறு வகையாகப் பணம் கடன்பெறுதலும் ;

(iii) சுற்றுலாப் பயணத்துறை அல்லது பயணத்துறைச் சேவைகளில் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்ற ஆட்களுக்கு, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, மானியக்கொடை, கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக நிதியுதவி வழங்குதலும் ;

(ச) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சேவைகள், வசதிகள் அல்லது சாதனங்கள் என்பவற்றுக்காகக் கட்டணங்களை அல்லது வேறு இறுப்புக்களை அறவிடுதலும் ;

(ஞ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்குரித்தாக்கப்படுகின்றவாறான அல்லது அதற்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அல்லது கையளிக்கப்படுகின்றவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் ; அத்துடன்

(ட) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்ததாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்கள் மற்றும் காரியங்கள் எல்லாவற்றையும் செய்தலும்.

அதிகாரசபையின் விசேட கடமைகள்.

**13.** பின்வருவன அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும் :—

(அ) அமைச்சரின் வேண்டுகோளின்மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணைமீது சுற்றுலாப் பயணத்தொழில்துறை மற்றும் பயணத் தொழில்துறை தொடர்பான எல்லாக் கருமங்கள்மீதும் அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் ;

(ஆ) சுற்றுலாப் பயணத்தொழில்துறை, பயணத்தொழில்துறை மற்றும் வேறு உறவுபட்ட தொழில்முயற்சிகள் என்பவற்றுக்கு அந்தந்தத் துறைகளிலான அபிவிருத்திகள் தொடர்பாக மதியுரை வழங்குதல் ;

(இ) சுற்றுலாப் பயணிகள் விடுதிகள், சுற்றுலாப் பயணச் சேவைகள் என்பவற்றைத் தாபித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும்அவற்றின் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் மேற்பார்வை, அபிவிருத்தி மற்றும் கட்டுப்பாடு என்பன தொடர்பிலான திட்டங்களைத் தயாரித்தலும் அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் ; அத்துடன்

(ஈ) அமைச்சரின் வழிகாட்டலுக்காக மேற்படி விடயங்கள் தொடர்பில் முன்மொழிவுகளை வகுத்தமைத்தல்.

உறுப்பினர்களின் ஊதியமும் சேவை நியதி நிபந்தனைகளும்.

**14.** அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலும் அத்தகையமுறையிலும் ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேவை, நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதி.

**15.** (1) சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு குறித்தளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் திறமையாக நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை அவசியம் எனக் கருதக்கூடிய வாறாக அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படலாம்.

(2) அதிகாரசபையானது, கொள்கை தொடர்பாக அமைச்சரின் பொதுவான பணிப்புகளுக்கு அமைவாக —

(அ) அதிகாரசபையின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், அவர்களைப் பதவி நீக்கலாம் ; அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் ;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சம்பளத்தை, கூலிகளை அல்லது வேறு ஊதியத்தைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்.

(3) (அ) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(ஆ) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(இ) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஈ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் பகுதிகளும் குழுக்களும்.

**16.** (1) அதிகாரசபையானது, அதிகாரசபையின் அலுவல்கள் தகுந்தமுறையிலும் வினைத்திறமையாகவும் நடாத்தப்படுவதற்கு அவசியமானவை என அது கருதக்கூடியவாறான அத்தகைய பகுதிகளைத் தாபித்துப் பேணிவரலாம்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் குறித்தளிக்கப்படவேண்டிய கடமைகளையும் பணிகளையும் தீர்மானிக்க வேண்டும்.

(3) அதிகாரசபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகாரசபைக்கு உதவுவதற்கென, அதன் உறுப்பினர்கள் அல்லது தோதான நிபுணத்துவத்தையுடைய வேறு எவரேனும் ஆட்கள் அடங்கிய அத்தகைய எண்ணிக்கையினவான குழுக்களை நியமிக்கலாம். அத்தகைய குழுக்கள் எல்லா நேரங்களிலும் அதிகாரசபை உறுப்பினரொருவரால் தலைமைதாங்கப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, அத்தகைய குழுக்களின் பணிகளை எடுத்துக்காட்டும் விதிகளை ஆக்கலாம்.

விதிகளை ஆக்குவதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

**17.** (1) அதிகாரசபையானது, விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அதிகாரசபைக்குரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் தொடர்பாக விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல் நடைமுறைக்கு வருதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*அமைச்சரால் விடுவிக்கப்படும் பணிப்புகளுக்கு அதிகாரசபை இணங்கியொழுகுதல்.*

**18.** (1) அமைச்சர் அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றை அதிகாரசபை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாக, சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத, பொதுவான கொள்கைப் பணிப்புகளை அதிகாரசபைக்கு வழங்கலாம்.

(2) அதிகாரசபை அமைச்சரால் வழங்கப்படும் அத்தகைய எவையேனும் பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, அதிகாரசபையின் செயற்பாடுகள் மற்றும் ஆதனம் என்பன தொடர்பான அமைச்சர் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை அமைச்சருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

### நிதியும் கணக்குகளும்

*அதிகாரசபையின் நிதியம்.*

**19.** (1) அதிகாரசபையின் பொதுவான நிதிசார் நோக்கங்களுக்காக நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். பின்வருவன நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்கும் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணம்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின்கீழ் அல்லது இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதிகாரசபையினால் அறவிடப்படும் எல்லா வீதவரிகளும், தீர்வைகளும், கட்டணங்களும், இறுப்புக்களும் ;

(இ) அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதிகாரசபையினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் ஆதனத்திலிருந்து அதிகாரசபையினால் பெறப்படும் எல்லா வருமானமும் ;

(ஈ) அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவைகளிலிருந்து அதிகாரசபையினால் பெறப்படும் எல்லா வருமானமும் ;

(உ) அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரினால் வழங்கப்பட்ட சேவைகளுக்காகவும், சட்டத்தில் கூறப்பட்ட நோக்கங்களுக்காக அதனால் அளிக்கப்படும் ஏதேனும் சான்றிதழுக்காகவும், உரிமத்துக்காகவும் அல்லது அங்கீகாரத்துக்காகவும் இறுப்புக்கள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் ; அத்துடன்

(ஊ) அதிகாரசபையின் வரவுக்கு வேறுவகையாகத் திரளும் மற்றெல்லாப் பணத்தொகைகளும்,

(2) நிதியத்திலிருந்து எவையேனும் பணங்களை மீளப் பெறுவதற்காக, அதிகாரசபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் விதிகளை ஆக்குதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விதிகளுக்கிணங்கத் தவிர, பணத்தொகை எதுவும் நிதியத்திலிருந்து மீளப் பெறப்படுதல் ஆகாது.

கணக்குகளின் கணக்காய்வு.

**20.** (1) அதிகாரசபையானது, அதன் சொத்துக்களும், பொறுப்புக்களும், வருமானமும் செலவினமும் மற்றும் அதிகாரசபையின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

*(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.*

*(3) (அ) அதிகாரசபையானது, ஏதேனும் ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன்மேல், சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக எடுக்கப்பட்ட நடபடிகளின் விரிவான அறிக்கை யைக் கொண்டிருக்கவேண்டிய அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம் பற்றிய பணிப்பாளர் தலைமை அதிபதியின் அறிக்கை யைப் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படச் செய்தல் வேண்டும் :—*

(i) *இயைபான ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை யதிபதியின் அறிக்கை ;*

(ii) *இயைபான ஆண்டுக்கான ஐந்தொகை ; அத்துடன்*

(iii) *இயைபான ஆண்டுக்கான இலாப, நட்டக் கணக்கு.*

*(ஆ) அமைச்சர், (அ) என்னும் பந்தியின்கீழ் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படச் செய்தல் வேண்டும்.*

*(4) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.*

*(5) இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கைகளையும் கணக்குகளையும் தயாரிப்பதில் உதவுவதற்கான தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் சேவைகளை ஈடுபடுத்த வேண்டியது அவசியமெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கருதுகின்ற விடத்து, அதிகாரசபை அவ்வாறு ஈடுபடுத்துவதற்குத் தத்துவம் கொண்டதால் வேண்டும் ; அவர்கள் கணக்காய்வாளர் தலைமை யதிபதியின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்று தல் வேண்டும்.*

*இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய் வாளர்" என்பது, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

**21.** அதிகாரசபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும், தண்டனைச் சட்டக்கோவையின் (19 ஆம் அத்தியாயம்) கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் உறுப்பினர்கள் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.*

**22.** அதிகாரசபை, இலஞ்சச் சட்டத்தின் (26 ஆம் அத்தியாயம்) பொருளுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அதிகாரசபை, இலஞ்சச் சட்டத்தின் (26 ஆம் அத்தியாயம்) பொருளுக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாதல்.*

## அத்தியாயம் III

### சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி நிதியம்

**23.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுற்றுலாப் பயண அபிவிருத்தி நிதியம் எனவழைக்கப்பட வேண்டிய நிதியமொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும், இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதற்கென ஆக்கப்படக்கூடிய எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க, சுற்றுலாப் பயணத்துறையின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்கும் இது பயன்படுத்தப்படுதல் வேண்டும். நிதியமானது அதிகாரசபையினால் முகாமை செய்யப்பட்டு நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

*சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்.*

(2) பின்வருவன (1) ஆம் உட்பிரிவினால் தாபிக்கப்பட்ட நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி விமானமேறல் அறவீடு என்ற வகையாகச் சேகரிக்கப்பட்ட பணத்தொகையின் மூன்றிலொன்று ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்தினுட் செலுத்தப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) அதற்கென ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளுக் கிணங்க, சுற்றுலாப் பயணத்துறையை மேம்படுத்து வதில் ஏதேனும் ஒழுங்கமைப்பினால் அல்லது எவரே னும் ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான எல்லாப் பணத் தொகை களும்.

(4) நிதியத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்திக்கிணங்கக் கணக்காய்வு செய்யப்படு தல் வேண்டும்.

(5) நிதியத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை யதிபதியின் அறிக்கை, அமைச்சரினால் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அறவீட்டினை அறவிடுதல்.

**24.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தினதும் மொத்த விற்பனை வரவின் மீது சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அறவீடொன்று, 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச்சட்டத் தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி பணிப்பாளர் தலைமையதி பதியினால் இறுக்கப்பட்டு, அறவிடப்பட்டு, சேகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், அறவீட்டினை விதித்தல், அறவீட்டைக் கொடுப்பனவு செய்யும் முறை மற்றும் அத்தகைய அறவீட்டினைச் சேகரிப்பது தொடர்பான விபரத் திரட்டுக்களை திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு கொடுத்துதவும் முறை என்பன தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அறவீட்டின் முகாமை, மற்றும் நிர்வாகத்திற்காக அதிகார சபையால் விதிகள் ஆக்கப்படலாம்.

(4) மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி இறுக்கப்பட்ட மற்றும் அறவிடப்பட்ட அறவீடு, அந்தந்தச் சேவைகளின் வழங்குநர்களினால் இடாப்பு ஒன்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் தகுந்த முறையில் கணக்குக் காட்டப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய சேவைகளின் வழங்குநர்களினால் அறவீடாகச் செலுத்தப்பட்ட பணங்களிற்குத் தனித்தனியான கணக்குககள் பேணப்படுதல் வேண்டும்.

(5) அறவீடாகச் சேகரிக்கப்பட்ட தொகைகளின் விபரங்கள் எல்லாவற்றையும் விதித்துரைக்கப்பட்ட முறையில் கொண்டுள்ள மாதாந்தக் கூற்று ஒன்று, அடுத்துறும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய ஒவ்வொரு சேவை வழங்குநரினாலும் அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(6) அதிகாரசபையினால் இறுக்கப்பட்ட அறவீடு காரணமாகச் சேகரிக்கப்பட்ட எல்லாப் பணங்களும் (5) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மாதாந்தக் கூற்று சமர்ப்பிக்கப்பட்ட திலிருந்து பதினைந்து நாட்களினுள் அதிகாரசபைக்குச் செலுத்தப் படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அறவீடு என்ற வகையாகச் சேகரிக்கப்பட்ட பணங்கள், 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட சுற்றுலாப் பயணத்துறை அபி விருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணங்கள் எல்லாம் பின்வரும் முறையில் செலவழிக்கப்படுதலும் வேண்டும் :—

(அ) எழுபது வீதத் தொகையினதான (70%) பணத்தொகையொன்று, பிரிவு 40 இன் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மேம்பாடு பணியகத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) பன்னிரண்டு வீதத் தொகையினதான (12%) பணத் தொகையொன்று, பிரிவு 33 இன் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(இ) பதினான்கு வீதத் தொகையினதான (14%) பணத் தொகையொன்று அதிகாரசபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) நான்கு வீதத் தொகையினதான (4%) பணத்தொகை யொன்று 42ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சமவாயப் பணியகத்திற்குச் செலுத்தப்படுதல் வேண் டும்.

(9) உட்பிரிவு (8) இல் தரப்பட்ட முறையில் அறவீடு என்ற வகையாகச் சேகரிக்கப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட பணங்கள், சுற்றுலாப் பயணம் மற்றும் பயணம் மேற்கொள்வோர் விரும்பிவரும் இடமொன்றாக இலங்கையை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான கொடுப்பனவுகளைச் செய்யும் நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## அத்தியாயம் IV

### சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்புகள்

*அதிகாரசபை வெளிப்படுத்தப் பட்ட இடப்பரப் பொன்றின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல்.*

**25.** அதிகார சபையானது, 26 ஆம் பிரிவின் நியதிகளின்படி, வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்பிலும் அதன்மீதும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்புகளை வெளிப்படுத்தல்.*

**26.** (1) அமைச்சரானவர், காலத்துக்குக் காலம், அதிகாரசபை யின் விதப்புரையின்மீது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் (இதனகத்துப்பின்னர் "இடப்பரப்பு" எனக் குறிப் பீடு செய்யப்படும்) ஏதேனும் இடப்பரப்பை சுற்றுலாப் பயணத் துறை அபிவிருத்தி இடப்பரப்பொன்றென வெளிப்படுத்தலாம்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் விதப்புரையைச் செய்வதற்கு முன்னர், அவ்விடப்பரப்பில் வாழ்பவர்களுக்கு அல்லது வேறெவரேனும் பங்களிப்புச் செய்கின்றவர்களுக்கு உரிய அறிவித்தல் கொடுத்தபின்னர், விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய முறையில் அத்தகைய பகிரங்கக் கேட்பை நடாத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்குள்ளாக நிறைவேற்றப்படக்கூடிய சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகள், வர்த்தக மற்றும் வேறு செயற்பாடுகள் என்பவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். அத்தகைய ஒழுங்குவிதிகள், அத்தகைய இடப்பரப்புக்குள்ளாக, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வசதிகள் மற்றும் வரலாற்று அல்லது சூழல்சார் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய நிரல்களையும் உள்ளடக்கலாம்.

*சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்புகள் தொடர்பான கட்டளைகள்.*

**27.** (1) இருபத்தியாறாம் பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பின் அல்லது இடப்பரப்புகளின் எல்லைகளைக் குறித்துரைத்தல் வேண்டும். இடப்பரப்பு, எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் தேசிய விடுமுறை விடுதியை அல்லது வேறு ஏதேனும் இடப்பரப்பை உள்ளடக்கலாம்.

(2) இருபத்தாறாம் பிரிவின் நியதிகளின்படியான கட்டளை ஒவ்வொன்றும் பத்து ஆண்டுகளுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(3) இருபத்தாறாம் பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் இடப்பரப்பை வெளிப்படுத்துவதன்மேல், அதிகாரசபையானது, 26ஆம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பாக, மேற்சொல்லப்பட்ட எழுத்திலான சட்டங்களில் குறித்துரைக்கப்பட்ட இயைபான அதிகாரிகளின் கலந்தாலோசனையுடனும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அளவு வரையும், அது அவசியமாகவிருக்கும் அளவுக்கு, ஏதேனும் இயைபான எழுத்திலுள்ள சட்டத்தினால் எவரேனுமாளுக்கு, குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும் அல்லது பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

(4) அதிகாரசபையானது, ஒழுங்குவிதி மூலம் —

(அ) இருபத்தி ஆறாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப் படுத்தப்பட்ட ஓர் அத்தகைய ஏதேனும் இடப்பரப்புக் குள்ளாக வரும் ஏதேனும் இடப்பரப்பை அணுகுவதற்கு ஏற்புடைத்தான நிபந்தனைகளை குறித்துரைக்கலாம். அத்தகைய ஒழுங்குவிதிகள், எவ்வாறாயினும், அத்த கைய ஒழுங்குவிதி பிரகடனப்படுத்தப்பட்ட நேரத்தில் உளதாயிருந்த, பகிரங்க வீதிகள், பகிரங்க நினைவுச் சின்னங்கள், வழிபாட்டிடங்கள், பகிரங்கப் பூங்காக்கள் பகிரங்க அலுவலகங்கள், பாடசாலைகள், மருந்தகங் கள் ஏனைய பகிரங்க இடங்கள் மற்றும் ஒன்றில் அர சாங்கத்தினால் ஒரு மாகாண சபையினால் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையினால் வழங்கப் படும் வசதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையனவாதலா காது ;

(ஆ) அமைச்சரின் அபிப்பிராயத்தில், சுற்றுலாப் பயணத் தொழில் துறையைப் பாதிக்கக் கூடியனவும், ஆதலால் அத்தகைய ஏதேனும் இடப்பரப்பினுள் அல்லது விடுதி யினுள் தடை செய்யப்படுவதைத் தேவைப்படுத்தக் கூடியனவுமான வர்த்தகச் செயற்பாடுகளின் வகுதி களை, அத்தகைய இடப்பரப்புகளினுட் பிரவேசிக்கின்ற ஆட்களுக்குப் பாதுகாப்பையும் காப்பையும் வழங்கு வதற்கும், அத்தகைய இடப்பரப்புகளினுள் சுகாதாரத் தீங்குகளைத் தடுப்பதற்கும் அல்லது குறைப்பதற்கு மான அவசியத்தைக் கவனத்துட் கொண்டு, குறித் துரைக்கலாம் ;

(இ) சுற்றுலாப் பயணிகளின் அக்கறை கொள்ளக்கூடிய அமைவிடங்கள் மற்றும் பொழுது போக்கிடங்கள் உட்பட, சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டுக்கென இடப்பரப்பொன்றுக்குள் கிடைக்கக்கூடிய வசதிகள் மற்றும் அமைவிடங்கள் என்பவற்றைக் குறித்து ரைக்கலாம்.

26 ஆம் பிரிவின் கீழ் வெளிப் படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக் குள்ளாகத் தனிமையைப் பாதுகாத்தல்.

**28.** (1) இருபத்தியாறாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத் தப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்குள்ளாகக் கிடைக்கக்கூடிய வசதிகளை அனுபவிப்பதிலிருந்து வேறு எவரேனும் ஆளைத் தடுக்கின்ற அல்லது தடுக்கும்வண்ணம் அத்தகையவொரு முறை யில் செயலாற்றுகின்ற அல்லது வேறு எவரேனும் ஆளின் தனிமையுடன் தலையிடுகின்ற ஏதேனும் செயலைச் செய்கின்ற அல் லது 27 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என் னும் பந்திகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாத தும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன் றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, "தனிமை" என்பது, நியாய மான ஆள் ஒருவருக்கு ஏதேனும் தலையீடு வெறுக்கத்தக்கதாகக் கருதப்படும், அவரது பிரத்தியேக வாழ்வுமுறையில் அத்தகைய தலையீடுமின்றி, 26 ஆம் பிரிவின் நியதிகளின்படி சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்புக்கென வெளிப்படுத்தப் பட்ட இடப்பரப்புக்குள் கிடைக்கும் சூழலையும், வசதிகளையும், சேவைகளையும் தனியாக அனுபவிப்பதற்கு விடப்படுவதற்கு எவரேனும் ஆளுக்குரிய உரிமையை உள்ளடக்குதல் வேண்டும்.

தேசிய சூழல் சட்டம், தொல் பொருள்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழான தத்துவங்கள் அதிகாரசபைக்கு உரித்தாக்கப் படுதல்.

**29.** (1) இருபத்தியாறாம் பிரிவின் நியதிகளின்படி இடப்பரப் பொன்றை வெளிப்படுத்தியதன்மேல், அதிகாரசபையானது, பத்தாண்டுக் காலப்பகுதிக்கு வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்புக் குள்ளாக அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அவசியமான அளவுக்கு, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, சூழல் சட்டத்தின்கீழும் (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கள் கட்டளைச் சட்டத்தின்கீழும், சூழல்சார் திட்டமிடல் மற்றும் தொல்பொருளியற் பேணிக்காப்பு என்பவற்றுக்கு அவசியமான எல்லாத் தத்துவங்களும் உரித்தாக்கப்பட்டதாக இருத்தல் வேண் டும்.

(2) மத்திய சூழல் அதிகாரசபை, (1) ஆம் உட்பிரிவின் நியதிக ளின்படி எந்தக் கருமம் தொடர்பில் அதிகாரசபைக்குத் தத்துவம் உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில், விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அதிகாரசபைக்கு அதன் விதப்புரையைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) (அ) இருபத்தியாறாம் பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் இடப்பரப்பை வெளிப்படுத்தியதன்மேல், 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய இடப்பரப்புக்குள்ளாக சூழல்சார் திட்டமிடல் தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய கட்டளைக் கற்களை விதித்துரைப்பதற்கு சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் ஒழுங்குவிதிகளை ஆக்குவது அமைச்சருக்குச் சட்டபூர்வமான தாதல் வேண்டும். இது தொடர்பில் மத்திய சூழல் அதிகார சபையினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அத்தகைய விதப்புரைகள் எக்காலப்பகுதியினுள் செய்யப்பட வேண்டுமோ அக்காலப்பகுதியும் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(ஆ) மத்திய சூழல் அதிகாரசபையின் விதப்புரையொன்றுடன் அதிகாரசபை உடன்பட்டுக்கொள்ளாதவிடத்து, அது அக்கருமத்தை சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அதன் மீதான அவரது முடிபு இறுதியானதாதலும் வேண்டும். அந்தக் குழுவின் உறுப்பினர் ஒருவர் அத்தகைய ஏதேனும் கருமம் கவனத்துக்கு எடுக்கப்படும் நேரங்களில் சமுகமாயிருத்தல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) அமைச்சர், சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், விதப்புரைகளைச் செய்வ தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும், அத்த கைய ஏதேனும் விதப்புரை எக்காலப்பகுதியினுட் செய்யப்பட வேண்டுமோ அக்காலத்தையும் விதித்துரைத்து, அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும்.

(ஈ) சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், 26 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறான ஓர் இடப்பரப்புக்குள்ளாகச் சூழல் திட்டமிடலில் பின்பற்றப்படவேண் டிய கட்டளைக் கற்களை விதித்துரைத்து ஒழுங்குவிதிகளை ஆக்கு தல் வேண்டும்.

(4) (அ) இருபத்தியாறாம் பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் இடப்பரப்பை வெளிப்படுத்தியதன்மேல், அத்தகைய இடப்பரப்புக் குள்ளாக (188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி, அத்தகைய தொல்பொருள் களின் அமைவிடங்களில் பார்வையாளர்களுக்கான வசதிகளைக் கிடைக்கச்செய்வது தொடர்பிலான தத்துவங்களைப் பிரயோகிப்பது அதிகாரசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். இத்தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதிகார சபையானது தொல்பொருளியல் ஆணையாளரின் சம்மதத்தைப் பெறுதல் வேண்டும். அத்தகைய சம்மதத்தைப் பெறுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை விதித்துரைக்கப் பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(ஆ) அமைச்சர் தொல்பொருள்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 26 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்புக்குள்ளாகத் தொல்பொருள்களைப் பேணிக்காப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை விதித்துரைத்து, அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும்.

(5) அத்தகைய சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி இடப்பரப்புத் தொடர்பாக, எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த அளவுக்கும் எந்த முறையிலும் எந்த ஆட்களினாலும் ஏற்புடைத்தாக்கப்படுதல் வேண்டும் என்பதனைக் குறித்துரைக்கும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, இயைபான விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் ஆக்கப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் "மத்திய சூழல் அதிகாரசபை" என்பது, 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை என்று பொரு ளாகும்.

நடைபயணஞ் செய்யும் இடப்பரப்பு களையும் இயற்கைத் தொடர்தட இடங்களையும் வெளிப்படுத்தல்.

**30.** இருபத்தியாறாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்குள்ளாக, மூட்டை முடிச்சுகளுடன் நடைபயணஞ்செய்யும் இடப்பரப்புகளும் இயற்கைத் தொடர்தட இடங்களும் அத்தகைய பயன்பாட்டுக்கென வெளிப்படுத்தப்பட்டு அடையாளங்காணப்படுதல் வேண்டும். பயணஞ்செய்யும் இடப்பரப்புக்களை அல்லது இயற்கைத் தொடர்தட இடங்களைப் பயன்படுத்தும் ஆட்களிடம் இருந்து ஒழுங்குவிதிமூலம் விதித்துரைக்கப்படவேண்டியவாறான கட்டணங்கள் இறுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய இடப்பரப்புகள் பயன்படுத்தப்படவேண்டிய முறையும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும். அமைச்சர், இயைபான விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஒழுங்கு விதிகளை ஆக்குதல் வேண்டும்.

அதிகாரசபை, தத்துவங்கள் முதலியவற்றைப் பிரயோகித்தல்.

**31.** அதிகாரசபையானது, 26 ஆம் பிரிவின் வெளிப்படுத்தப்பட்ட ஓர் இடப்பரப்புத் தொடர்பில் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் கீழான எல்லாத் தத்துவங்களையும் ஏற்றமாற்றங்களுடன் பிரயோகித்தல் வேண்டும்.

## பாகம் III

## அத்தியாயம் V

### சுற்றுலாப் பயணத்துறை மதியுரைக் குழு

சுற்றுலாப் பயணத்துறை மதியுரைக் குழுவைத் தாபித்தல்.

**32.** (1) சுற்றுலாப் பயணத்துறை மற்றும் பயணத் தொழில்துறை தொடர்பான எவையேனும் கருமங்கள்மீது அமைச்சருக்கும் அதிகாரசபைக்கும் மதியுரை வழங்கும் நோக்கத்துக்காக, (இதனகத்துப்பின்னர் “மதியுரைக்குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சுற்றுலாப் பயணத்துறை மதியுரைக்குழு என அழைக்கப்பட வேண்டிய குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மதியுரைக்குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வருவோர் பதவிவழி உறுப்பினர்களாதல் வேண்டும் :—

(i) அதிகாரசபையின் தவிசாளர் ;

(ii) 33 ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் தவிசாளர் ;

(iii) 41 ஆம் பிரிவின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை மேம்பாட்டுப் பணியகம் ;

(iv) இலங்கை தேசிய வானூர்திச் சேவையின் பிரதான நிறைவேற்றலுவலர் ; அத்துடன்

(ஆ) உலகளாவிய பயணத்துறை, சுற்றுலாப் பயணத்துறை மற்றும் தொடர்புபட்ட தொழில்துறைகள் என்பன தொடர்பாகப் பரந்த அனுபவமும் தகைமைகளும் உடைய ஐந்துக்குக் குறையாதோரும் பதினொன்றுக்கு மேற்படாதோருமான ஆட்கள் ; அவர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய ஆட்களுள் ஒருவர் மதியுரைக் குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சர் குறித்துக்காட்டப்பட்ட காரணங்களுக்காக, மதியுரைக் குழுவின் எவரேனும் உறுப்பினரை அகற்றலாம்.

(5) சுற்றுலாப் பயணத்துறை மற்றும் பயணத் தொழில்துறை என்பவற்றின் வருங்கால நெறிப்படுத்துகை அத்துடன் யுக்தி பற்றி மதியுரை அளித்தலும், அதன் மீதான விதப்புரைகளைச் செய்தலும் மதியுரைக் குழுவின் கடமையாதல் வேண்டும்.

(6) மதியுரைக் குழுவின் கடமைகளைப் புரிதலும், தத்துவங்களைப் பிரயோகித்தலும் பற்றிய விசேடமான அல்லது பொதுவான பணிப்புரைகளை அமைச்சர் எழுத்தில் வழங்கலாமென்பதுடன், மதியுரைக் குழுவானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

(7) அதிகாரசபை மதியுரைக்காக ஏதேனும் கருமத்தை மதியுரைக் குழுவுக்கு அளிக்கலாமென்பதுடன், மதியுரைக் குழுவானது, இயன்றளவு மிகக் குறுகிய காலப்பகுதியினுள் அதன் மதியுரையை அளித்தலும் வேண்டும்.

(8) மதியுரைக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும். ஆயின், பதவி விலகுகின்ற அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) காலங்கழிவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்ற எவரேனும் உறுப்பினர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(10)(அ) மதியுரைக் குழுவின் எவரேனும் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம்

(ஆ) உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக, தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர், அவர் வருகைதராதிருக்கும் காலப்பகுதிக்காக அவரது இடத்தில் உறுப்பினரொருவராகச் செயலாற்றவென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(11) மதியுரைக் குழுவானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், இப்பாகத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் மதியுரைக் குழுவுக்கு உதவுவதற்கென அத்தகைய அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமிக்கலாம்.

(12) அவசியமானவிடத்து, மதியுரைக் குழுவின் உறுப்பினர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக நிதியத்திலிருந்தான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

# அத்தியாயம் VI

## இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்

*இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தைத் தாபித்தல்.*

**33.** (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகமென அழைக்கப்பட்டு அறியப்படும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; இது இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*நிறுவகத்தின் குறிக்கோள்கள்.*

**34.** நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) ஆளணியினரின் பயிற்சி தேவையாகவுள்ள சுற்றுலாப் பயணத் தொழில்துறையுடன் சம்பந்தப்பட்டதுறைகளை அடையாளங்காணுதலும், மிகச் சிறந்த கல்வி சார் மற்றும் உயர்தொழில்சார் பயிற்சியளிப்போரின் சேவைகளைப் பெறுதலும் ;

(ஆ) அடையாளங்காணப்பட்ட கற்கைத்துறைகளில் பாடவிதானத்தை அபிவிருத்தி செய்தல் ;

(இ) சுற்றுலாப்பயணத்துறையை அபிவிருத்தி செய்வதற்குச் சுற்றுலாப் பயணத்துறையுடன் உறவுபட்ட பாடங்களில் மூன்றாம்நிலைக் கல்வியும் வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சியும் தேவைப்படும் அத்தகைய அளவுக்கு அவற்றை வழங்குதல் ;

(ஈ) சுற்றுலாப் பயணத்துறையுடன் முழுமையாக அல்லது பகுதியளவில் சம்பந்தப்பட்ட பணியில் ஈடுபடுவதற்கு உள்ளூர் அல்லது வெளிநாட்டு ஆட்களுக்குப் பயிற்சியளிக்கும் ஆட்களுடன் அல்லது குழுக்களுடன் ஒத்துழைத்தல் ;

(உ) நிறுவகத்திடமிருந்து பெறப்பட்ட தகைமையின் தன்மையைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு தனியாளுக்கும் பங்குபற்றுகைச் சான்றிதழ்களை அளித்தல் ;

(ஊ) சுற்றுலாப் பயணத்துறையுடன் முழுமையாக அல்லது பகுதியளவில் சம்பந்தப்பட்ட பாடசாலைகளையும் பயிற்சி நிலையங்களையும் சொந்தமாக வைத்திருத்தலும், முகாமைசெய்தலும், அவற்றின் சொத்தாண்மையிலும் முகாமையிலும் பங்குபற்றுதலும் ; அத்துடன்

(எ) அதன் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

நிறுவகத்தின் முகாமைச் சபை.

**35.** (1) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட, (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவகத்தின் முகாமைச் சபையொன்று இருத்தல் வேண்டும் ; அவருக்கு நிறுவகத்தின் முகாமையும் நிருவாகமும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் ஆளுநர்கள் சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்ட ஆள் ;

(ஆ) 36 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(இ) 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஈ) சுற்றுலாப் பயணத்துறை, பயணத்துறை, ஹோட்டல் முகாமைத்துவத்திலான பயிற்சி என்னும் துறைகளிலான அறிவைக்கொண்ட ஆட்களாகவிருக்க வேண்டியவர்களும், அமைச்சரினால் நியமிக்கப்படுவோருமான ஆட்கள் இருவர் ;

(உ) 40 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சுற்றுலாப்பயணத்துறை மேம்பாட்டுப் பணியகத்தின் முகாமைப் பணிப்பாளர் ;

(ஊ) இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை ஹோட்டல்கள் கழகம், இலங்கைப் பயணத்துறை முகவர்கள் கழகம், இலங்கை உள்வருகை சுற்றுலாப்பயணத் தொழிற் படுத்துநர்கள் கழகம் மற்றும் ஹோட்டல் பாடசாலைப் பட்டதாரிகள் கழகம் என்பவற்றின் கலந்தாலோசனை யுடன் அமைச்சரினால் நியமிக்கப்பட்டோரும், பின் வரும் முறையில் தெரிவு செய்யப்பட்டோருமான ஆட்கள் அலுவலர் :—

(i) இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை ஹோட்டல்கள் கழகத்திலிருந்து பிரதிநிதிகள் இருவர் ;

(ii) இலங்கைப் பயணத்துறை முகவர்கள் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ;

(iii) இலங்கை உள்வருகை சுற்றுலாப்பயணத் தொழிற்படுத்துநர்கள் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆள் ஒருவர் ; அத்துடன்

(iv) ஹோட்டல் பாடசாலைப் பட்டதாரிகள் கழகத்திலிருந்து நியமித்தர்கள் இருவர் ; அத்துடன்

(எ) சுற்றுலாப் பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி.

நிறுவகத்தின் பணியாட்டொகுதி.

**36.** (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதி பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் சபையினது விதப்புரையின்மீது அமைச்சரினால் நியமிக்கப்படும் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஆ) கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அவசியமான அத்தகைய கல்விசார் பணியாட்டொகுதியினர் அவர்கள் சபையின் அங்கீகாரத்துடன் நிறுவகத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) நிறுவகத்தின் பணிகளைப் பயனுற நிறைவேற்றுவதற்கு அவசியமானவர்களெனச் சபை கருதுகின்றவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும்.

(2) மேலே (அ) என்னும் பந்தியின்கீழான விதப்புரையைச் செய்வதற்காகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, நிறுவகத்தின் பிரதான நிறை வேற்றலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர், நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கும் நடாத்துவதற்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் சபையின் விதப்புரையின்மீது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அவர்களுக்குப் பொறுப்பிக்கப்பட்டவாறான அத்தகைய கடமைகளை, பணிப்பாளர் தலைமையதிபதியினாற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய முறையில் அவர்கள் நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, சபையானது -

(அ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரை நியமித்தலும், பதவிநீக்குதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் வேண்டும் ;

(ஆ) நடப்புச் சந்தை வீதங்களுக்கு உரிய கவனஞ்செலுத்தி, அத்தகைய பணியாட்டொகுதியினரின் கூலிகளையும் சம்பளங்களையும் அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்.

சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் முதலியன.

**37.** (1) சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும். ஆயின், பதவிவிலகுகின்ற அல்லது வேறு வகையாகப் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் எந்த உறுப்

பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் எவையேனும் வகுப்பிலான அல்லது விவரணத்திலான சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளிலும் ஹோட்டல் முகாமைத்துவத்திலும் பயிற்சி வழங்குகின்ற ஏதேனும் தொழிலின் அல்லது தொழிலில் சொந்தக்காரராக, ஒரு பங்காளராக, ஒரு பணிப்பாளராக, ஒரு பெரும்பான்மைப் பங்குடையவராக அல்லது ஊழியர் ஒருவராக இருந்தால், அல்லது வந்தால், அவர், நிறுவகத்தின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) காலங்கழிவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்ற எவரேனும் உறுப்பினர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(4) அமைச்சர் சபையின் எவரேனும் உறுப்பினரை, குறித்துக் காட்டப்படும் காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) (அ) சபையின் எவரேனும் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதம்மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(ஆ) சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக உறுப்பினரொருவர் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், அவர் இல்லாதிருக்கும் காலப்பகுதிக்காக அவரின் இடத்தில் உறுப்பினரொருவராகச் செயலாற்றவென வேறோராளை நியமிக்கலாம்.

(6) சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், இப்பாகத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் சபையை உதவுவதற்கான அத்தகைய அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமிக்கலாம்.

(7) அவசியமானவிடத்து, சபையின் உறுப்பினர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

*ஹோட்டல் பாடசாலை நிறுவகத்துக்கு உரித்தாக்கப் படுதல்.*

**38.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தியாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச்சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலை, இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து நிறுவகத்துக்குரித்தாதல் வேண்டும்.

(2) உரித்தாக்கற் தேதியன்று நிறுவகத்துக்குச் சொந்தமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எல்லாம் நிறுவகத்துக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டும்.

(3) ஹோட்டல் பாடசாலைப் பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள் எல்லோரும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று, சொல்லப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்தின் பணியாட்டொகுதியினராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஹோட்டல் பாடசாலையின் வரவுக்கிருக்கும் எல்லாப் பணங்களும் 19 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

*நிறுவகத்தின் கல்வி விவகாரங்கள் சபையை நியமித்தல்.*

**39.** (1) நிறுவகமானது அமைச்சரின் கலந்தாலோசனையுடன், கல்வி விவகாரங்கள் சபையொன்றை நியமித்தல் வேண்டும் ; இது, தவிசாளராகவிருக்கவேண்டிய பணிப்பாளரொருவரையும் நான்கு வேறு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கல்வி விவகாரங்கள் சபையானது, நிறுவகத்தின் கல்வி விவகாரங்களைச் செயற்படுத்துவதற்கும் முகாமைசெய்வதற்கும் பொறுப்பாதல் வேண்டும். நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட அல்லது தொழிற்படுத்தப்பட்ட ஏதேனும் பாடசாலையின் நிருவாகம், கல்வி விவகாரங்கள் சபைக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவனவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :-

(அ) கல்வி விவகாரங்கள் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கும்முறையும், நிறுவகத்தின்கீழான பாடசாலைகள் எம்முறையில் நிறுவகிக்கப்படவேண்டுமோ அம்முறையும் ;

(ஆ) சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் என்பவற்றிலான பயிற்சியை வழங்குவதற்காக, தனிப்பட்டமுறையில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலைகளைத் தாபிப்பதற்கு, முகாமை செய்வதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கு நாடுகின்ற ஆட்களுக்குத் தேவையான கட்டளைக்கற்களும், அத்தகைய பாடசாலைகள் எம்முறையில் நிருவகிக்கப்படவேண்டுமோ அம்முறையும்.

## அத்தியாயம் VII

### இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மேம்பாட்டுப் பணியகம்

**40.** (1) (இதனகத்துப்பின்னர் "பணியகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மேம்பாட்டுப் பணியகம் என அழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; இது, இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். இலங்கை சுற்றுலாப் பயணத்துறை மேம்பாட்டுப் பணியகம்.

(2) பணியகமானது, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணியகத்தின் தவிசாளராகவிருப்பதற்கென அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஆள் ;

(ஆ) 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(இ) பணியகத்தின் முகாமைப் பணிப்பாளர் ;

(ஈ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ; அத்துடன்

(உ) இலங்கை உள்வருகை சுற்றுலாப்பயணத் தொழிற் படுத்துநர்கள் கழகத்தின் மற்றும் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை ஹோட்டல்கள் கழகத்தின் கூட்டுப் பேரவையின் நியமத்தர்களாகவிருக்கவேண்டிய அறு வருக்கு மேற்படாத ஆட்கள் ; அத்துடன்

(ஊ) சுற்றுலாப் பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செய லாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(3) தவிசாளராக நியமிக்கப்பட்ட ஆள், சந்தைப்படுத்தலும், விளம்பரப்படுத்தலும் சுற்றுலாப்பயணத் தொழில்துறையுடன் உறவுபடும் அளவுக்கு, அவற்றிலான அறிவையும் அனுபவத்தை யும் உடைய ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.

(4) பணியகமானது, பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட தாதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தித்திட்டத்துக்கு இணங்க, சுற்றுலாப் பயணத்துறை மற்றும் பயணத்துறைப் பயணிகள் விரும்பிவரும் தரமான இடமாக, நேரடி யாகவோ நேரடியாகவல்லாமலோ இலங்கையைச் சந்தைப்படுத்துதலும் மேம்படுத்துதலும் ;

(ஆ) தெற்காசியப் பிராந்தியத்துக்கான வாயில் வழியாக இலங்கையை மேம்படுத்துதல் ; அத்துடன்

(இ) சுற்றுலாப்பயண முகாமைத்துவத்திலும் அபிவிருத்தி யிலும் பிராந்தியத்திலுள்ள மிகத் திறமையான நிலைய மொன்றாக இலங்கையை அறியத்தருதல்.

(5) பணியகத்துக்குக் காலத்துக்குக்காலம் அமைச்சரினால் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அத்துடன் சுற்றுலாப்பயணத் தொழில் துறையின் தேவைகளைக் கவனத்துட்கொண்டு, காலத்துக்குக் காலம் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமை களும் பணிகளும் அதற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) பணியகத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் செயற்படுத்துவதற்காக அதிகார சபையானது பணியகத்துக்கு வருடாந்த குறித்தொதுக்கலொன்றை அளித்தல் வேண்டுமென்பதுடன், குறித்தொதுக்கப்பட்ட நிதிகளை உச்சளவுக்குப் பயன்படுத்துதல் பணியகத்தின் பொறுப்பாதலும் வேண்டும்.

(7) பணியகத்தினது அலுவல்களின் நிருவாகம், அத்தகைய நோக்கத்துக்காக அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய முகாமைப் பணிப்பாளர் ஒருவருக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். முகாமைப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆளிடமிருந்து தேவைப்படுத்தப்படும் தகைமைகளும் ஏனைய கட்டளைக்கற்களும் விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(8) இலங்கையை வெளிநாட்டில் மேம்படுத்துதலும் சந்தைப் படுத்துதலும் சம்பந்தமாகப் பணியகமானது, அதன் கடமைகளைத் திறமையாக நிறைவேற்றும் நோக்கத்துக்காக, இலங்கையினுள்ளும் வெளிநாட்டிலும் அலுவலகங்களைப் பேணிவருதல் வேண்டும்.

(9) பணியகமானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் முடிவிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்று முடிவுறும் முன்னர், பின்வருவனவற்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) அவ்வாண்டின்போது அதன் பணிபற்றிய அறிக்கையொன்று ;

(ஆ) நடப்பாண்டின் மூன்று மாதங்களினுள் முன்னைய பஞ்சாங்க ஆண்டிற்கான அதன் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகளின் பிரதியொன்றும் பஞ்சாங்க ஆண்டின் ஏழாம் மாதத்தின் முடிவுக்கு முன்னர் அரையாண்டுக்கணக்குகளின் பிரதியொன்றும் ;

(இ) அடுத்து பின்வரும் பஞ்சாங்க ஆண்டிற்காக அதன் வருமானமும் செலவினமும் பற்றியவொரு மதிப்பீடாகவுள்ள, அமைச்சரினால் குறித்துரைக்கப்படு

கின்றவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள கூற்றொன்று ;

(ஈ) பணியகத்தினால் எய்தப்படவுள்ள பணியைக் குறித்துக்காட்டுகின்ற மூன்றாண்டுகாலம் பகுதிக்கான திட்டமொன்று ;

(உ) முன்னைய ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட திட்டம் தொடர்பான எய்துகைகளையும் செயல்நிறைவேற்றத்தையும் கொண்டுள்ள கூற்றொன்று.

பணியகத்தின் உறுப்பினர் களினது பதவிக்காலம் முதலியன.

**41.** (1) பணியக உறுப்பினர்களின் பதவிக்காலம், மூன்றாண்டுகளாதல் வேண்டும். ஆயின், பதவிவிலகுகின்ற அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) ஆளொருவர், எவையேனும் வகுப்பினவான அல்லது விவரணத்தினவான சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளைத் தொழிற்படுத்துகின்ற அல்லது வழங்குகின்ற ஏதேனும் தொழிலின் அல்லது தொழிலில் சொந்தக்காரராக, ஒரு பங்காளராக, ஒரு தொழிற்பாட்டுப் பணிப்பாளராக, ஒரு பெரும்பான்மைப் பங்குடையவராக அல்லது ஊழியர் ஒருவராக இருந்தால், அல்லது வந்தால், பணியகத்தின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) காலங்கழிவதன்மூலம் பதவியைத் துறக்கின்ற எவரேனும் உறுப்பினர், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(4) (அ) பணியகத்தின் எவரேனும் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதம்மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(ஆ) பணிகயத்தின் உறுப்பினரொருவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக, தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், அவர் வருகைதராதிருக்கும் காலப்பகுதிக்காக அவரின் இடத்தில்

உறுப்பினரொருவராகச் செயலாற்றுவதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

(5) பணியகமானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், இப்பாகத்தின்கீழ் சபை அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் அதற்கு உதவுவதற்கென அத்தகைய அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமிக்கலாம்.

(6) அவசியமானவிடத்து, பணியக உறுப்பினர்களுக்கும் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## அத்தியாயம் VIII

### இலங்கைச் சமவாயப் பணியகம்

*இலங்கைச் சமவாயப் பணியகம்.*

**42.** (1) (இதனகத்துப்பின்னர் "சமவாயப் பணியகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைச் சமவாயப் பணியகம் என அழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; இது இடையறா வழியுரிமையுடனும் பொது இலச்சினையொன்றுடனுமான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(2) சமவாயப் பணியகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டுச் சமவாயங்கள், கூட்டங்கள் அத்துடன் கண்காட்சிகள் என்பன நடைபெறுகின்ற இடமாகவும், பயணிகள் விரும்பிவரும் ஊக்குவிப்பு இடமாகவும் இலங்கையை மேம்படுத்துதல் ;

(ஆ) சர்வதேச, பிராந்திய, மற்றும் உள்நாட்டுச் சமவாயங்கள், கூட்டங்கள் அத்துடன் கண்காட்சிகள் நடைபெறும் இடமாகவும் பயணிகள் விரும்பிவரும் ஊக்குவிப்பு இடமாகவும் இலங்கையின் ஒருங்கிணைந்த, ஒத்துழைப்

பான அபிவிருத்தியையும் சந்தைப்படுத்தலையும் உறுதிப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பொதுவான கொள்கையொன்றை வழங்குதல் ;

(இ) சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டுச் சமவாயங்கள், கூட்டங்கள், கண்காட்சிகள் அத்துடன் ஊக்குவிப்புப் பயணம் என்பன, பகிரங்க, தனியார் துறைகளினால் மேம்படுத்தப்படுதலையும், அபிவிருத்தி செய்யப்படுதலையும், சேவையளிக்கப்படுதலையும் ஒருங்கிணைத்தலும் உதவுதலும் ;

(ஈ) சமவாயங்கள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பன வெற்றிகரமாக நடாத்தப்படுவதனையும் ஊக்குவிப்புப் பயண நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சமவாய, கண்காட்சி மற்றும் ஊக்குவிப்புப் பயண ஒழுங்குபடுத்துநர்களுடன் ஒருங்கிணைதலும் ஒத்துழைத்தலும் ;

(உ) சமவாயங்கள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்புப் பயணம் என்பவற்றின் பல்வேறு அம்சங்களைக் கையாளுவதில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களினால் அல்லது ஒழுங்கமைப்புகளினால் உயர்தொழில்சார் நியமங்கள் பேணப்படுவதனை விதித்துரைத்தலும் வலியுறுத்தலும் ;

(ஊ) சமவாயங்கள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்புப் பயணம் என்பவற்றைக் கையாள்வதில் சம்பந்தப்பட்டுள்ள வெவ்வேறு பகுதியினரான ஆட்களிடையேயும் அல்லது வெவ்வேறு வகுதியினவான ஒழுங்கமைப்புகளிடையேயும் உயர்தொழில்சார்நுட்பங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதனை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும் ;

(எ) சமவாயங்கள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்புப் பயணம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதில் அல்லது மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கழகத்துடன் அல்லது ஒழுங்கமைப்புடன்

இணைதலும், அதில் உறுப்பாண்மையைப் பெறுதலும், அல்லது அதனோடு ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதலும் ;

(ஏ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் இலங்கையைப் பயணிகள் விரும்பிவரும் சுற்றுலாப் பயணத்துறை மற்றும் பயணத்துறை இடமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும், சந்தைப்படுத்து வதற்கும் பணியகத்துக்கு வழிகாட்டுதலை வழங்குதல் ;

(ஐ) விருந்தோம்பல் தொழில்துறை உட்பட போதியதான கவர்ச்சிகரமான வினைத்திறமையான சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளை நிலைபேறானவொரு முறையில் அபிவிருத்தி செய்தலும், மேம்படுத்துதலும் ; அத்துடன்

(ஒ) பணியகத்தின் குறிக்கோள்களை எய்துவதன் இடை நேர்விளைவான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் இலங்கையில் அல்லது வேறெங்கேனும் செய்தல்.

**43.** (1) ஐந்துக்குக் குறையாதோரும் பதின்மூன்றுக்கு மேற்படா தோருமான உறுப்பினர்களைக் கொண்ட சமவாயப் பணியகத்தின் முகாமைச் சபையொன்று இருத்தல் வேண்டும். *சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபை.*

(2) பின்வருவோர் முகாமைச் சபையின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாதல் வேண்டும் :—

(i) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தினதும் கண்காட்சி நிலையத்தினதும் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) இலங்கை சுற்றுலாப்பயண ஹோட்டல்கள் கழகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) இலங்கை உள்வருகைச் சுற்றுலாப் பயணத் தொழிற் படுத்துநர்கள் கழகத்தின் தலைவர் அல்லது அத்தகைய கழகத்தின் துணைத்தலைவர் ;

(iv) கொழும்பு மாநகரச் சுற்றுலாப்பயண ஹோட்டல்கள் கழகத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி ;

(v) இலங்கை அறிவியல் முன்னேற்றத்துக்கான கழகத்தின் பொதுத்தலைவர் அல்லது அத்தகைய கழகத்தின் துணைத்தலைவர் ;

(vi) இலங்கை உயர்தொழில்சார் கழகங்களின் ஒழுங் கமைப்பினது தலைவர் அல்லது அத்தகைய கழகத் தின் துணைத்தலைவர் ;

(vii) இலங்கை வர்த்தக, கைத்தொழிற் கூட்டங்களின் சம்மேளனத்தினது தலைவர் ;

(viii) சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபை யின் நிதியமைச்சைப் பிரதிநித்துவம் வகிக்கின்ற ஆள் ;

(ix) 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுற்றுலாப் பயணத் துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(x) வரையறுக்கப்பட்ட இலங்கை விமானச் சேவைகளின் முகாமைத்துவத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை விமானச் சேவைகளின் நிறைவேற்றலுவலர் ஒருவர் அல்லது சிரேஷ்ட நிறை வேற்றலுவலர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி யிலுள்ள அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(xi) சுற்றுலாப்பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் நியமத்தர்கள் இருவர் ; அவர்களுள் ஒருவர் அவ்வமைச்சின் அலு வலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் தவிசாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக் கப்பட்ட சபையுறுப்பினர்களாகவுள்ள ஆட்களிடையேயிருந்து சுற்றுலாப்பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும். தவிசாளர் மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) சபையின் எவரேனும் உறுப்பினர் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று சபைக்கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பதுடன் மாற்று உறுப்பினரொருவரினால் பிரதிநிதித்துவப்படுத்தப் படாதுமிருப்பின், அவ்வுறுப்பினரை அகற்றுவதற்கு சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபை அதிகாரம் கொண்டுள்ளது.

(4) சுற்றுலாப்பயணத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அவரது தற்றுணிபின்படி, சபையின் உறுப்பினரொருவராக, தொழில்துறையின் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவொரு துறையைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கழகமொன்றின் தவிசாளராக அல்லது தலைவராக உள்ள ஆளொருவரை நியமிக்கலாம். எவ்வாறாயினும், அத்தகைய உறுப்பினர் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(5) சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபை உறுப்பினர்களுக்கான ஏதேனும் ஊதியம்,நிதியமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரி னால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(6) சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபை உறுப்பினரொருவர், அவர் நேரடியாக அக்கறைகொண்டுள்ள ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் அல்லது அத்தகைய ஒப்பந்தத்தின்மூலம் எழுகின்ற ஏதேனும் கருமம் தொடர்பில் வாக்களித்தலாகாது என்பதுடன், அவர் அவ்வாறு செய்தால், அவரது வாக்கு எண்ணப்படுதலுமாகாது.

**44.** சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபை உறுப்பினரொருவரின் பதவி, அவ்வுறுப்பினர் — தகைமையீனங்கள்.

(அ) வங்கிமுறிந்தவராக அல்லது கடனிறுக்கவகையற்றவராக வந்தால் அல்லது பொதுவாக அவரது கடன் கொடுநர்களுடன் ஏதேனும் ஒழுங்கேற்பாட்டை அல்லது பங்குவீதத்தைச் செய்தால் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை காரணமாக முகாமைச் சபையின் உறுப்பினரொருவராகவிருப்பதற்குத் தடை செய்யப்பட்டவராக வந்தால் ; அல்லது

(இ) சித்தசுவாதீனமற்றவராக வந்தால் ; அல்லது

(ஈ) சமவாயப் பணியகத்துக்கான எழுத்திலான அறிவித்தல் மூலம் அவரது பதவியிலிருந்து விலகினால் ; அல்லது

(உ) சட்டத்தின் நியதிகளின்படி சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபையின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால், வறிதாக்கப்படுதல் வேண்டும்.

*சமவாயப் பணியகத்தின் பொது முகாமையாளர்.*

**45.** சமவாயப் பணியகமானது, சமவாயப் பணியகத்தின் பொது முகாமையாளராக இருக்கவென ஆள் ஒருவரைத் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும். பொது முகாமையாளர் பணியகத்தின் பிரதான நிறைவேற்றலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன், பொது முகாமையாளரின் தொழில் நியதிநிபந்தனைகள் சமவாயப் பணியகத்தின் முகாமைச்சபையினால் குறித்துரைக்கப்படுதலும் வேண்டும்.

*சமவாயப் பணியக முகாமைச் சபையின் மாற்று உறுப்பினர்கள்.*

**46.** (1) முகாமைச் சபை உறுப்பினரொருவரின் இடத்தில் சமவாயப் பணியக சபைக்கு நியமிக்கப்படும் ஆள் ஒருவர், "மாற்று உறுப்பினர்" ஒருவரென அழைக்கப்படுதல் வேண்டும்.

(2) மாற்று உறுப்பினரொருவராக இருக்கவென நியமிக்கப்படும் ஆள் ஒருவர், அத்தகைய நியமனம் தொடர்பில் சமவாயப் பணியகத்திடமிருந்து ஏதேனும் ஊதியத்தைப் பெறுதலாகாது. எவ்வாறாயினும் சமவாயப் பணியக முகாமைச் சபையானது, மாற்று உறுப்பினர் வருகைதருவதற்கு உரித்துடையவராகவுள்ள சமவாய முகாமைச் சபையின் கூட்டங்களுக்கு வருகைதருவதிலும் திரும்பிச் செல்வதிலும் அவர் உறக்கூடியவையும் அல்லது சமவாயப் பணியகத்தின் தொழில் அல்லது தொழில் தொடர்பாக அத்தகைய உறுப்பினர் வேறுவகையாகத் தகுந்த முறையில் உறக்கூடியவையுமான அத்தகைய நியாயமான செலவுகளை அவருக்கு மீளளிக்கலாம் அல்லது இச்செலவுகள் தொடர்பில் அது தகுந்தவையென எண்ணக்கூடியவாறான அத்தகைய படிகளைச் செலுத்தலாம்.

(3) நாற்பத்திநான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி இயைபான சபையுறுப்பினரினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய மாற்று உறுப்பினர் ஒருவர், சமவாயப் பணியக முகாமைச் சபையின் எல்லாக் கூட்டங்களும் பற்றிய அறிவித்தல்களைப் பெறுவதற்கும், அவரை நியமித்தவர் சமுக

மாயிராத அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் முகாமைச் சபையுறுப் பினரொருவராக வருகைதருவதற்கும் வாக்களிப்பதற்கும், அத்து டன் அத்தகைய நியமித்தவர் வருகைதராதிருக்கையில், அவரை நியமித்தவரின் எல்லாப் பணிகளையும் பொதுவாகப் புரிவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) மாற்று உறுப்பினரொருவர் சமவாயப் பணியகத்தின் குறித் துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றுக்கு, அல்லது குறித்துரைக் கப்பட்ட ஒரு சம்பவத்தின் விளைவாக அல்லது அச்சம்பவம் வரை நியமிக்கப்படலாம்.

(5) மாற்று உறுப்பினரொருவர் —

(அ) அவரை நியமித்தவர் சமவாயப் பணியக முகாமைச் சபை உறுப்பினரொருவராக இல்லா தொழிந்தால் ; அல்லது

(ஆ) மாற்று உறுப்பினர் அவரது கடன் கொடுநர்களுடன் சமரசத்துக்கு ஒத்துப் போயிருந்தால் அல்லது கடனி றுக்க வகையற்றவரென நீதித்தீர்ப்பளிக்கப்பட்டால் ; அல்லது

(இ) மாற்று உறுப்பினர் எழுத்திலான அறிவித்தல்மூலம் அவரது பதவியிலிருந்து விலகினால் ; அல்லது

(ஈ) சமவாயப் பணியக முகாமைச் சபையின் மாற்று உறுப்பினர் பித்துப்பிடித்தவராக அல்லது சித்த சுவாதீனமற்ற ஆளாக வந்தால் ; அல்லது

(உ) சமவாயப் பணியக முகாமைச் சபையின் மாற்று உறுப்பினரின் நியமனம், எழுத்திலான அறிவித்தல் மூலம் அவரை நியமித்தவரினால் இல்லாதொழிக் கப்பட்டால்,

சமவாயப் பணியக முகாமைச் சபையின் உறுப்பின ரொரு வராக இல்லாதொழிவார்.

பணியகத்தின் பணங்கள்.

**47.** சமவாயப் பணியகமானது, அப்பணியகத்தின் வினைத் திறமையாக பணியாற்று கைக்காக, சுற்றுலாப்பயணத்துறை அபி விருத்தி அறவீடாகச் சேகரிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகையின் நான்கு சதவீதத்தையும் (4%), அரசாங்கத்தினால் அதற்குக் குறித் தொதுக்கப்பட்ட வேறேதேனும் பணத்தையும் பெறுதல் வேண்டும்.

## பாகம் IV

## அத்தியாயம் IX

### சுற்றுலாப் பயணத்துறைத் தொழில் முயற்சிகளையும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளையும் பதிவுசெய்தலும், சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகள் தொடர்பிலான விலகலையும், கட்டணங்களையும், வீதவரிகளையும், இறுப்புக்களையும் ஒழுங்குபடுத்துதலும்

*சுற்றுலாப் பயணத்துறைத் தொழில் முயற்சிகளையும் சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளையும் வெளிப்படுத்துதலும் பதிவு செய்தலும்.*

**48.** (1) அமைச்சர், அதிகாரசபையின் விதப்புரையின்மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சுற்றுலாப் பயண மற்றும் பயணத் தொழில் துறைகளினுள் தொழிற்படுத்தப் படுகின்ற குறித்த சில தொழில்களையும் சேவைகளையும், முறையே சுற்றுலாப்பயணத்தொழில் முயற்சிகளாகவும் மற்றும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளாகவும் வகுப்பாக்கம் செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட வகுப்பாக்கத்தினுள் அடங்குகின்ற ஒவ்வொரு சுற்றுலாப் பயணத் தொழில்முயற்சியும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவையும் அதிகார சபையுடன் பதிவுசெய்யப்பட்டு, வெவ்வேறு வகுப்பாக்கங் களுக்கிணங்க, அத்தகைய தொழில்முயற்சியின் அல்லது சேவையின் பெயரில் அதிகாரசபையினால் உரிமமொன்று வழங்கப் படுதல் வேண்டும். உரிமம் பெற்ற சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சிகளும் சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளும் பற்றிய இடாப்பொன்று அதிகாரசபையினால் பேணி வரப்படுதல் வேண்டும். பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகளும் உரிமங்களை வழங்குகின்ற முறையும் விதித்துரைக்கப் பட்டவாறிருத்தல் வேண்டும்.

(4) சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சியெதுவும் அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவையெதுவும், இப்பிரிவின் நியதிகளின்படி, அவை, அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டிருந்தாரொழிய, தொழில் கொண்டுநடாத்துதலாகாது. பதிவுசெய்யப்

பட்டிராமல் அல்லது உரிமமொன்று வழங்கப்பெறாமல் தொழில் கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் சுற்றுலாப் பயணத்தொழில் முயற்சி அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவை இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவும் உரிமமும் இல்லாதாக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(5) அத்தகைய உரிமமளித்தலுக்கும் பதிவுக்கும் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்படும் உரிமமொன்று, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், உரிமங்களைப் புதுப்பிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க வழங்கப்படுதலும் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்று, ஏதேனும் உரிமம் பெற்ற சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சியினால் அல்லது சுற்றுலாப் பயணத்துறைச் சேவையினால் வழங்கப்படுகின்ற சேவைகளின் ஆகக்குறைந்த நியமங்களைப் பேணுவதற்கான தேவைப்பாட்டுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(8) அதிகாரசபையானது பின்வருவன தொடர்பான விதிகளை ஆக்குதல் வேண்டும் :—

(அ) சுற்றுலாப்பயணத் தொழில்முயற்சிக்கு அல்லது சுற்றுலாப் பயணத்துறைச் சேவைக்கு உரிமமொன்று வழங்கப்படு முன்னர், உரிமமானது எச்சேவைக்காக நாட்படுகின்றதோ அச்சேவையை வழங்குவதற்கு அதன் ஆற்றலையும் இயலுமாந்தன்மையையும் எடுத்துக்கூறி அதிகாரசபைக்கு விபரமான அறிக்கையொன்றை முன்வைத்தல் ; அத்துடன்

(ஆ) உரிமம் பெற்ற சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சியினால் அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவையினால் அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தின்கீழ் வழங்கப்படும் சேவையின் சோதனைகளை நிறைவேற்றும் முறையும் அதனைக் கண்காணித்தலும்.

(9) இப்பிரிவின் நியதிகளின்படி உரிமம் பெற்ற ஒவ்வொரு சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சியும் சுற்றுலாப் பயணத்துறைச் சேவையும், அதனால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான ஒவ்வொரு விளம்பரத்திலும், கடிதத்தொடர்பிலும் அல்லது வேறு அறிவிப்பிலும், இப்பிரிவின் நியதிகளின்படி அதற்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சியாக அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவையாக உள்ளதென்று பொருள்பட்ட கூற்றொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(10) பதிவுசெய்யப்பட்டிராத ஏதேனும் சுற்றுலாப்பயணத் தொழில்முயற்சியும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவையும், அது பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப் பயணத் தொழில் முயற்சியும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவையுமாகத் தொடர்ந்திருத்தல் தவறொன்றாதல் வேண்டும்.

நடத்தைக் கோவைகளை விதித்துரைப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

**49.** (1) அமைச்சரானவர் அதிகாரசபையின் மதியுரையின்மீது, நடத்தைக் கோவைகளை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும். இவை, பின்வரும் சுற்றுலாப்பயணத் தொழில்முயற்சிகளும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளும் ஆகிய எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும் :—

(அ) சுற்றுலாப்பயண ஹோட்டல்கள் ;

(ஆ) பயணத்துறை முகவர்கள் ;

(இ) சுற்றுலாப்பயண வழிகாட்டு அறிவுரையாளர்கள் ;

(ஈ) அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் அடையாளங்காணப்படக்கூடியவாறாக (மேலேயுள்ள எவற்றினுள்ளும் அடங்காத சேவைகளைக் கொண்டுள்ள ஒரு சுற்றுலாப்பயணத்துறைச் சேவையாகவுள்ள) குறித்துரைக்கப்பட்ட சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகள்.

(2) இப்பிரிவின் நியதிகளின்படி இயற்றப்பட்ட ஏதேனும் நடத்தைக் கோவையில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமத்துக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஓர் இலட்சம் ரூபாவான குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளும் சுற்றுலாப் பயணத்தொழில் முயற்சிகளும் காலத்துக்குக் காலம் வகுதிப்படுத்தப் படுதல்.

**50.** (1) அமைச்சரானவர், அதிகாரசபையின் மதியுரையின் மீது, சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சிகளினதும் சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளினதும் வகுப்புக்களை வகுதிப்படுத்த லாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தொழில் முயற்சியினால் அல்லது சேவையினால் பேணிவரப்படவேண்டிய நியமனங் களைக் காலத்துக்குக் காலம் விதித்துரைத்தலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், சுற்றுலாப்பயணத் தொழில்முயற்சிகளி னதும் சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளினதும் வகுப்புக்களை வகுதிப்படுத்தியுள்ளவிடத்து, அதிகாரசபை, (1) ஆம் உட்பிரிவின் கீழ் வகுதிப்படுத்தப்பட்ட சுற்றுலாப்பயணத் தொழில் முயற்சி களின் அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளின் ஏதேனும் வகுப்புக்கு நியமங்கள் பற்றிய சான்றிதழொன்றை வழங்கலாம்.

(3) ஏதேனும் சுற்றுலாப் பயணத் தொழில் முயற்சியினால் அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவையினால் வழங்கப்படு கின்ற ஏதேனும் சேவை, அதற்கு வழங்கப்பட்ட நியமங்கள் பற்றிய சான்றிதழிற் குறித்துரைக்கப்பட்ட நியமத்திற்குக் குறைவாகவிருப் பதாகக் காணப்படுமிடத்து, அதன் நியமங்களைச் சீராக்கி, சான்றி தழிற் குறித்துரைக்கப்பட்ட நியமத்தை எய்துவதற்குத் தொழில் முயற்சி அல்லது சேவை எந்நடபடிகளை எடுப்பதற்கு தேவைப் படுத்தப்படுகின்றதோ அந்நடபடிகளை அதிகாரசபை அடை யாளங்காணுதல் வேண்டும். அதிகாரசபையினால் அடையாளங் காணப்படுகின்றவாறான அத்தகைய நடபடிகளுக்கு ஏதேனும் தொழில்முயற்சி அல்லது சேவை இணங்கியொழுகத் தவறு மிடத்து, அதிகாரசபையானது, அத்தகைய தொழில் முயற்சிக்கு அல்லது சேவைக்கு வழங்கப்பட்ட சான்றிதழை உடனடியாக இல்லாதாக்குதல் வேண்டும்.

மேன் முறையீடுகள்.

**51.** நாற்பத்திமூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதி களின்படி எந்த ஆளுக்கு உரிமமொன்றை அளித்தல் மறுக்கப் படுகின்றதோ அல்லது 45 ஆம் பிரிவின் நியதிகளின்படி எந்த

ஆளின் சான்றிதழ் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள், இந்நோக்கத்துக்காக அமைச்சரினால் நியமிக்கப்டும் மேன் முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்யலாம். நியாய சபையின் அமைப்பும் நியாயசபையினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் சின்னம்.

**52.** (1) அமைச்சரானவர், அதிகாரசபையின் சின்னமாக இருக்கவேண்டிய சின்னமொன்றை குறித்துரைத்தல் வேண்டும். உரியமுறையில் பதிவுசெய்யப்பட்ட எல்லாப் பயணத்துறை மற்றும் சுற்றுலாப்பயணத் தொழில்முயற்சிகளுக்கும் விதித்துரைக்கப் படும் முறையில் அச் சின்னத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது வெளிக்காட்டி வைப்பதற்கு அதிகாரமளிக்கப்படும்.

(2) ஆளெவரும், அதிகாரசபையின் அனமதியின்றி அதிகார சபையின் சின்னத்தைப் பயன்படுத்துதலோ அல்லது வெளிக் காட்டி வைத்தலோ ஆகாது.

(3) அதிகாரசபையின் அனுமதியின்றி அதிகாரசபையின் சின்னத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது வெளிக்காட்டி வைக்கின்ற அல்லது மூன்றாம் திறத்தவரொருவரைப் பிழைவழி யுய்க்கக்கூடியவாறான அல்லது அவருக்கு மயக்கமேற்படுத்தக் கூடியவாறான அத்தகையவொரு முறையில் அதிகாரசபையின் சின்னத்தைக் கிட்டத்தட்ட பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சின்ன மொன்றை அல்லது உருவமைப்பை பயன்படுத்துகின்ற அல்லது வெளிக்காட்டி வைக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

விலை ஒழுங்கு படுத்தற் கட்டளை.

**53.** (1) அதிகாரசபையின் தவிசாளர், அதிகாரசபையுறுப் பினர்களின் விதப்புரையின்மீது, ஏதேனும் சுற்றுலாப்பயணத் துறைச் சேவையை வழங்குவதற்காகச் சுமத்தப்படக்கூடிய, விதிக் கப்படக்கூடிய, கோரப்படக்கூடிய அல்லது அறவிடப்படக்கூடிய விலைகளையும், வீதவரிகளையும், கட்டணங்களையும் அல்லது இறுப்புக்களையும் ஒழுங்குபடுத்துதல், அவசியமெனத் தோன்றக் கூடியவாறான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னர் அவருக்கு உசிதமானதாகத் தோன்றுமிடத்து, கட்டளைமூலம் அவ்வாறு செய்யலாம். அத்தகைய கட்டளை இச்சட்டத்தில் “விலை ஒழுங்குபடுத்தற் கட்டளை” எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையானது —

(அ) இலங்கை பூராவும் உள்ள எல்லாச் சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படுவதற்குரியதாக்கப்படலாம். அல்லது கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான இலங்கையிலுள்ள அத்தகைய ஏதேனும் இடத்தில் அல்லது இடப்பரப்பில் உள்ள சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளுக்கு அதன் நடைமுறையில் வரையறுக்கப்படலாம் ;

(ஆ) அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறான சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகளின் அத்தகைய ஏதேனும் விவரணத்துக்கு அதன் ஏற்புடைமையில் வரையறுக்கப்படலாம் ;

(இ) வெவ்வேறு விவரணங்களினவான சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகள் தொடர்பில் அல்லது அதே விவரணத்தினவான வெவ்வேறு வகுப்பினவான சுற்றுலாப் பயணத்துறைச் சேவைகள் தொடர்பில், விலைகளையும், வீதவரிகளையும், கட்டணங்களையும் அல்லது இறுப்புக்களையும் ஒழுங்குபடுத்தலாம் ; அத்துடன்

(ஈ) அத்தகைய எவையேனும் சேவைகளினால் அளிக்கப்படும் வாழ்வசதிகளின் அல்லது வசதிகளின் தரமும் நியமங்களும் பற்றிய நிபந்தனைகளுட்பட அத்தகைய எவையேனும் சேவைகளினால் அத்தகைய விலைகள், வீதவரிகள், கட்டணங்கள் அல்லது இறுப்புக்கள் எந்த நிபந்தனைகளுக்கமைய சுமத்தப்படலாமோ, விதிக்கப்படலாமோ, கோரப்படலாமோ அல்லது அறவிடப்படலாமோ அந்த நிபந்தனைகளை விதித்துரைக்கலாம்.

(3) (அ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையை ஆக்குவதில், ஏதேனுமொரு வகுப்பினவான சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளின் ஏதேனும் விவரணம், அதே விவரணத்தினவான சுற்றுலாப்பயணத்துறைச் சேவைகளின் வேறேதேனும் வகுப்பிலும் பார்க்கக்கூடுதலான

ஆகக்கூடிய விலைகளை, வீதவரிகளை, கட்டணங்களை அல்லது இறப்புக்களைச் சுமத்துவதற்கு, விதிப்பதற்கு, கோருவதற்கு அல்லது அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துவதற்கான அவசியத்தை முதற்கண் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, "வகுப்பு" என்ற பதம், ஏதேனும் விவரணத்தினதான ஏதேனும் பயணத்துறை அல்லது சுற்றுலாப் பயணத்துறைச் சேவை தொடர்பாக, சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய நோக்கத்துக்காகப் பேணப்பட்ட இடாப்பில் அச்சேவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட வகுப்பாக்கம் என்று பொருளாகும்.

(4) ஒவ்வொரு விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையும், அத்தகைய கட்டளை அதிகாரசபையின் தவிசாளரினால் ஆக்கப்பட்டு ஒப்பமிடப்படும்போது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளை அதிகாரசபையின் தவிசாளரினால் ஒப்பமிடப்பட்டுள்ள பின்னர், அது பற்றிய பகிரங்க அறிவித்தல் பின்வருமாறு உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் :—

(அ) வர்த்தமானியில் அத்தகைய கட்டளை வெளியிடப்படுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அந்நோக்கத்துகாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாரான வேறேதேனும் விதமாகவும்.

(6) ஒவ்வொரு விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையும், அது நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து இருவாரங்களினுள், அமைச்சரினால் கவனத்துட்கொள்ளப்படுவதற்கு அவரின் முன்னர் இடப்படுதல் வேண்டும் என்பதுடன், அமைச்சர் அதன்மேல் கட்டளையை அங்கீகரித்தலும் அல்லது இல்லாதொழித்தலும் வேண்டும்.

(7) ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளை (6) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் இல்லாதொழிக்கப்படுமிடத்து, அத்தகைய இல்லாதொழிப்புப் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளை

யானது, அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் செய்யப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட எதற்கும், அல்லது அதன்கீழ் கொள்ளப்பட்ட, திரண்ட அல்லது உறப்பட்ட உரிமை, கடப்பாடு அல்லது பொறுப்பு எதற்கும் பங்கமின்றி, அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளை அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(9) மேலேயுள்ள ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளை, பயண, மற்றும் சுற்றுலாத்தொழில்துறையின் மிகச்சிறந்த நலன் கருதி காலத்துக்குக்காலம் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(10) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையும் பாராளுமன்றத்தின் முன்னர் அமைச்சரால் இடப்படுதல் வேண்டும்.

ஒரு விலை ஒழுங்குபடுத்தற் கட்டளையை ஆக்குவதன் மீதான கடப்பாடுகள்.

**54.** ஏதேனும் விலை ஒழுங்குபடுத்தற் கட்டளை அப்போதைக்கு நடைமுறையிலிருக்குமிடத்து, அக்கட்டளை தொடர்புபட்டுள்ள ஒவ்வொரு சுற்றுலாப்பயணத்துறைச் சேவையின் உரிமையாளர் அல்லது முகாமையாளர் —

(அ) அத்தகைய உரிமையாளரினால் அல்லது முகாமையாளரினால் வழங்கப்பட்டனவும், அக்கட்டளையிற் குறிப்பீடு செய்யப்பட்டனவுமான சேவைகளுள் ஒவ்வொன்று தொடர்பிலும் அறவிடப்பட்ட விலைகள், வீதவரிகள், கட்டணங்கள் அல்லது இறுப்புக்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணிவருதல் அல்லது பேணிவரச் செய்தல் வேண்டும் ;

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாளினால் அத்தகைய இடாப்பைச் சோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாக்குதல் அல்லது கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) துலாம்பரமானவோர் இடத்திலும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், அக்கட்டளையிற் குறிப்பீடு செய்யப்பட்ட விலைகள், வீதவரிகள், கட்டணங்கள் அல்லது இறுப்புக்கள் என்பவற்றின் நிரலொன்றை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

## பாகம் V

## அத்தியாயம் X

### பொது

*துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் உறப்பட்ட செலவுகளைக் கொடுப்பனவு செய்தல்.*

**55.** ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் சட்டமுறையாக உறப்படும் ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுத் தொகை அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக் கப்படுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக் கெதிராக எழுத்தாணை யெதுவும் அமைதலாகாது.*

**56.** அதிகாரசபைக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் வழக்கில் அதிகாரசபையின் உறுப்பினரொருவருக்கெதிராக, ஆளுக்கெதிரான அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணை யெதுவும் அமைதலாகாது.

*சாதனங்கள் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.*

**57.** அதிகாரசபையினால் வழங்கப்பட்ட சாதனமொன்றாக வுள்ளதும், இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக இலச்சினையிடப்பட்டதாகவுள்ளதும் அல்லது அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் ஒப்பமிடப்பட்டதாகவுள்ளது மாகக் கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு சாதனமும், சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கான முதற்றோற்றச் சான்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபை தகவல் கோருதல் வேண்டும்.

**58.** அதிகாரசபை அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், அறிவித்தலிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதியினுள், எவரேனுமாளின் அறிவுக்குட்பட்டவையும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு அவசியமான சுற்றுலாப் பயணத்துறை அல்லது ஏனைய திட்டங்களை அதிகாரி தயாரிப்பதனை வசதிப்படுத்துவதற்கெனத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பானவையுமான அத்தகைய எல்லா விபரத்திரட்டுக்களையும் அல்லது தகவலையும் அதிகாரசபைக்கு அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவுமாறு அவ்வாளை அறிவித்தலின் மூலம் தேவைப்படுத்தலாம்.

அதிகாரசபையானது காணியினுட் பிரவேசிக்கலாம் முதலியன.

**59.** அதிகாரசபை அல்லது அதற்கென அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், அதற்கென நீதிவானுக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு அளிக்கப்படும் அல்லது அதன்மீது சுமத்தப்படும் தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிக்கும் அல்லது புரியும் நோக்கத்துக்காக, இடப்பரப்பில் அமைந்துள்ள ஏதேனும் காணியின்மீது அல்லது கட்டமைப்பின்மீது அல்லது அதனுட் பிரவேசிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சோதனைகளையும், நில அளவைகளையும், பரிசோதனைகளையும் அல்லது விசாரணைகளையும் செய்யலாம்.

அறிவித்தல் முதலியவற்றைச் சேர்ப்பிக்கும் முறை.

**60.** (1) எவரேனுமாளுக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்கு இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் அறிவித்தல், கட்டளை, சாதனம் அல்லது வேறு ஆவணம் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளை —

(அ) அவ்வாளுக்கு ஒப்படைக்கப்படுவதன் மூலம்; அல்லது

(ஆ) அவ்வாளின் வழமையான அல்லது கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில், அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் விடயத்தில், அக்குழுவின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அதனை விட்டுவிடுவதன் மூலம்,

சேர்ப்பிக்கப்படலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சேர்ப்பிக்கப் பட்ட ஏதேனும் ஆவணம், அது எவ்வாளுக்கு முகவரியிடப் படுகின்றதோ அவ்வாளுக்கு உரிய முறையில் சேர்ப்பிக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பயணத்துறை அல்லது சுற்றுலாப் பயணத் துறைச் சேவைகளில் தொழிலுக் கமர்த்தப் படுவதற்கு விரும்புகின்ற ஆட்கள் அதிகார சபையுடன் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

**61.** *(1)* ஏதேனும் பயணத்துறை அல்லது சுற்றுலாப்பயணத் துறைச் சேவையில் தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், அதற்காகத் தகுதியானவரும் பொருத்தமான வருமான ஆளாக, அதற்கென ஆக்கப்படக்கூடியவாறான ஒழுங்கு விதிகளுக்கிணங்க, அதிகாரசபையுடன் தன்னைப் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும்.

*(2)* அதிகாரசபையுடன் பதிவுசெய்துகொள்ளாமல் பயணத் துறை அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் சேவையிலான தொழி லில் ஈடுபடுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவம்.

**62.** *(1)* எக்கருமத்துக்காக இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப் படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப் படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எது தொடர்பிலும் அதிகாரசபை விதிகளை ஆக்க லாம்.

*(2)* இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதி யெதுவும், அமைச்சரினால் அங்கீரிக்கப்படும்வரை, பயனுடைய தாதலாகாது. அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தவறுகள்.

**63.** *(1)* *(அ)* இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப் பட்ட ஏதேனும் கட்டளையின்கீழ் அல்லது அவற்றின் நோக்கங்களுக்காக செய்யப்பட்ட அல்லது கொடுத் துதவப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தில், விபரத் திரட்டில் அல்லது வேறு ஆவணத்தில் ஏதேனும் பொய்யான அல்லது பிழையான கூற்றை அறிந்து கொண்டு அளிக்கின்ற ; அல்லது

(ஆ) சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது விபரத் திரட்டைக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற ; அல்லது

(இ) இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையினால் அல்லது அவற்றின்கீழ் எவரேனுமாளுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அல்லது புரிகையில் அவ்வாளை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற,

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான ஒரு தவறைப் புரிகின்ற ஆளொவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

குற்ற வழக்குகளுக்கு அதிகார சபையின் அனுமதி பெறப்படுத்தல் வேண்டும்.

**64.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கெதுவும், அதிகாரசபையின் எழுத்திலான அனுமதியுடன் தவிர, ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதலாகாது.

ஆட்கள் குழுவினாலான தவறுகள்.

**65.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினாற் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கும் தாம் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

தவறுகளை இணக்கி வைத்தல்.

**66.** (1) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு, அத்தகைய தவறுக்கான குற்றவழக்கெதுவும் முடிவுறாததாக இராதிருப்பின், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கொடுப்பனவு செய்யப்படுவதன்மீது அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இணக்கிவைக்கப்படலாம் அல்லது அத்தகைய தவறுக்கானவொரு குற்றவழக்கு உண்மையில் முடிவுறாதிருப்பின், அவ்வாறு இணக்கிவைப்பதற்கான காரணங்களை நீதிவான் பதிவதன்மேல், நீதிவானின் ஒருப்பாட்டுடன் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அவ்வாறு இணக்கிவைக்கப்படலாம்.

(2) இப்பிரிவின்கீழான தவறொன்றை இணக்கிவைத்தலானது, ஒரு விட்டுவிடுதலின் பயனைக் கொண்டதாதல் வேண்டும்.

(3) தவறொன்றை இணக்கிவைக்கும் நோக்கத்துக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் செலுத்தப்பட்ட பணங்கள் அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தை நீக்குதல்.

**67.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தியாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய நீக்கம் பயனுக்கு வரவேண்டிய தேதியை நியமித்தல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தியாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டம் நீக்கப்பட்டதிலிருந்தும் அதன் பின்னரும் :—

(அ) நீக்கற்றேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைக்குரித்தாக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனமெல்லாம், நீக்கஞ்செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அதிகார சபைக்குரித்தாதல் வேண்டும் ;

(ஆ) இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையுடன் அல்லது அச்சபையால் செய்துகொள்ளப்பட்டவையும் நீக்கற்றேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், நீக்கஞ் செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், நீக்கற்றேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், நீக்கஞ்செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவுசெய்யவும் படலாம் ;

(ஈ) நீக்கற்றேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையின் உறுப்பினர்களாகவும், அலுவலர்களாகவும், சேவையாளர்களாகவும் இருந்த ஆட்கள் எல்லோரும், நீக்கஞ்செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, அதிகாரசபையின் உறுப்பினர்களாகவும், அலுவலர்களாகவும், சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) இலங்கை உல்லாசப் பிரயாணச்சபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக அளிக்கப்பட்டவையும் அல்லது ஆக்கப்பட்டவையும் நீக்கற்றேதிக்கு முற்போந்த நாளன்று திருப்திப்படுத்தப்படாதுள்ளவையுமான எல்லாத் தீர்ப்புகளும் கட்டளைகளும், நீக்கஞ் செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக அளிக்கப்பட்டவையாக அல்லது ஆக்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம் ; அத்துடன்

(ஊ) நீக்கற்றேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை உல்லாசப் பிரயாணச்சபையினால் கட்டுப்படுத்தப்பட்டு முகாமைசெய்யப்படுகின்ற எல்லாப் பயிற்சிப் பாடசாலைகளும் நிறுவகங்களும், நீக்கஞ்செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 33 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட சுற்றுலாப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்துக்கு உரித்தாக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தியாறாம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மேற்கூறப்பட்ட சட்டம் நீக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட எல்லா அனுமதிப் பத்திரங்களும் உரிமங்களும் அந்த அனுமதிப்பத்திரங்களும் உரிமங்களும் இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்டாலொழியவும் வழங்கப்படும்வரையும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்டனவென்றாற்போன்று செல்லுபடியுள்ளனவாகவும் பயனுள்ளனவாகவும் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்.

**68.** ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அச்சட்டத்தின் அ என்னும் பிரிவாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய பிரிவை அச்சட்டத்தின் 1ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்துவதன்மூலமும் :—

"2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டமும் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையும்", முறையே "முதன்மைச் சட்டம்", "சபை" என்னும் சொல்லமைப்புகளுக்குப் பதிலாக இடப்படுதல்.

1அ. இச்சட்டத்தில் "முதன்மைச் சட்டம்", "சபை" என்னும் சொல்லமைப்புகள் காணப்படும் இடங்களிலெல்லாம், அத்தகைய சொல்லமைப்புகள் முறையே "2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்துக்கும்", 2005ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட "இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கும்" ஆன குறிப்பீடொன்றாக இருப்பனவாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(2) அச்சட்டத்தின் IV ஆம் பாகத்தின் I ஆம் அத்தியாயத்தினது 77, 78, 79, 80, 81, 82 ஆகிய பிரிவுகளை நீக்கஞ்செய்வதன்மூலமும் ;

(3) அச்சட்டத்தின் 103 ஆம் பிரிவில்,—

(அ) "சபை" என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன்மூலமும் ;

(ஆ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன்மூலமும் ; அத்துடன்

(இ) "முதன்மைச் சட்டம்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன்மூலமும் ;

(4) அச்சட்டத்துக்கான நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம் அட்டவணைகளை நீக்குவதன் மூலமும்.

ஒழுங்கு விதிகள்.

**69.** (1) எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர்கள் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்குவருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அதன் வெளியீட்டுத் தேதிக்குப் பின்னர் வசதியாகக்கூடியளவு விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண் டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

காணியின் வலுக்கட்டாயக் கொள்ளுதல்.

**70.** ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலான அக்கறை, அதிகாரசபையின் நோக்கங்களுள் எதற்காகவும் அதற்குத் தேவைப் படுமிடத்து, அக்காணி அல்லது அதிலுள்ள அக்கறை, அதிகார சபைக்காக அரசாங்கத்தினால் காணிகொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாம் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அக் காணியை அல்லது அதிலுள்ள அக்கறையைக்கொள்ளும் நோக்கத் துக்காக ஏற்புடையனவாதலும் வேண்டும். அத்தகைய காணி அல்லது அதிலுள்ள அத்தகைய அக்கறை, காணிகொள்ளுதற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒரு பகிரங்க நோக்கத்துக்காகத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**71.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.டூ

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*